வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 16.09.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 281 பக்கங்கள் : 16




## ஏ. எல். பரீட்சை ஒருபோதும் பிற்போடப்பட மாட்டாது!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 16

உயர்தர பரீட்சையை ஒத்திவைப்பதற்கு எவ்வித தேவையும் ஏற்படவில்லை என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சையை ஒத்திவைக்கு மாறு அரசியல்வாதிகள் கோரிக்கை விடுக் கின்றனர் என்றும் அவர் கூறினார். 15

## தியாகி திலீபன் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக ஆரம்பமானது!

### பொத்துவிலில் ஊர்தி பவனியும் தொடங்கியது!



யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு பொறுப்பாளரான திலீபன் (இராசையா பார்த்தீபன்) இந்தியப் படை 15

# இலங்கைக்கு நிதியுதவி இனி இந்தியா வழங்காது!

புதுடில்லி, செப்ரெம்பர் 16

**இலங்கைக்கு இந்த ஆண்டில் 380 கோடி டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது. இனி இந்தியா எந்த நிதியுதவியும் வழங்காது என்று இந்திய அரச தரப்பு தெரிவித்துள்ளது.**

வீழ்ச்சியடைந்த இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்ப கடன் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து உறுதிப்படத் தொடங்கியிருக்கிறது என பதை சுட்டிக்காட்டியே இந்தியா இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 70 ஆண்டுகளில் கண்டிராத மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்த இலங்கைக்கு இந்தியா 380 கோடி டொலர்களை கடன் அடிப்படையில் வழங்கியது. இலங்கையின் நிலைமை மே, ஜூலை மாதங் 15

## உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதே சரி!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கிளிநொச்சி, செப். 16

இலங்கைக்குள் சமாதான, சகவாழ்வை முன்னெடுக்க விரும்பினால் உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக இந்த பிரச்சினைகளை தீர்ப்பதுதான் சரி - இவ்வாறு கூறியிருக்கிறார் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா.

தமிழ் மக்கள் மீது இழைக்கப் பட்ட மனித உரி 15




மனித உரிமைகள் பேரவையில் சுரேந்திரன் கோரிக்கை மனுவை வாசித்தபோது...!

## அமைச்சு பதவி கிடைத்தால் மனதார ஏற்றுக்கொள்வேன்!

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, செப். 16

"அமைச்சுப் பதவி கிடைத்தால் நான் அதை மனதார ஏற்றுக்கொள்வேன். ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் இனிமேல் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க முடியாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லை."

- இவ்வாறு முன் 15

## மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் புதிய தேர்தல் மூலமே ஏற்படும்!

### சஜித் பிரேமதாஸ



அம்பாறை, செப். 16

போராட்டத்தை நடத்திய மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இதுவல்ல. புதிய தேர்தல் மூலமே அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக அனைவரும் தயாராகவுள்ளோம் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை தேர்தல் தொகுதி அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து 15

## இலங்கையை ஐ. சி. சியில் பாரப்படுத்த வேண்டும்!

### 6 கட்சிகளின் கோரிக்கை ஐ. நாவிடம்

ஜெனிவா, செப். 16

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ. சி. சி) முற்படுத்த வேண்டும் என்று ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பித்த கூட்டுக் கோரிக் 15

## முஸ்லிம்கள் பிரச்சினைகளையும் ஐ. நா. அறிக்கையில் உள்வாங்குக

### ஐ. நாவுக்கு கோரிக்கை மனு

யாழ்ப்பாணம், செப். 16

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத்தொடரில், அதன் இறுதித் தீர்மான அறிக்கையில் வடக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் மற்றும் அபிலாசைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் மனு கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளருக்கு பெயரிடப்பட்டு, ஐக்கிய நாடுகளின் யாழ்ப்பாண பிரதி 15

## உள்நாட்டு உற்பத்தி 8.4 வீதமாக சுருக்கம்!

கொழும்பு, செப். 16

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4 வீதமாக சுருங்கியுள்ளது என்று தொகைமதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 - இரண்டாம் காலாண்டில், விவசாயம் 15

## நல்லூரில் தியாகி திலீபன் நினைவேந்தலில் குழப்பம்

### அரசு அனுமதி வழங்கியும் ஒற்றுமையாக செயற்பட முன்வராத தமிழர் தரப்புகள்

யாழ்ப்பாணம், செப். 16

தியாகி திலீபனின் நினைவிடத்தில் நேற்று குழப்பம் ஏற்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும், மணிவண்ணன் அணியினருக்குமிடையில் நீடித்த குழப்பம் நேற்று நினைவு நிகழ்வில் குழப்பமாக வெடித்தது. கடந்த சில வருடங்களாக நினைவு நிகழ்வுக்கு பாதுகாப்புத் தரப்பினர் இடையூறு 15

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் ஜெனிவாவில் சமர்ப்பிக் கப்பட்டுள்ள முதலாவது நகல் வடிவ பிரேரணை நல்லதொரு நகல் என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்று தெரிவித்திருந் தேன். அதனை அந்தப் பத்தியை எழுதிய பின்னர்தான் படிக்க முடிந்தது.

எதற்காக அதனை நல்ல நகல் என்று அவர் தெரிவித்தார் என்பதை அவர் இனி அதுபற்றி சொல்லும்வரை காத்திருப் போம். இனி இன்றைய விடயத்திற்கு வருவோம்.

அவர் ஒரு முக்கிய பிரமுகர். கொழும்பில் முக்கிய தலைவர் ஒருவருக்கு நெருக்கமானவர் அவர். நேற்று தொலைபேசியில் தொடர்பில் வந்தவர் கேட்டார், "அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடப் போகின்றதாமே உண்மையா?", என்று.

அவர் அவ்வாறு கேட்டதும் இவர் இதைத்தான் சொல்கிறார் என்பது புரிந்தது.

அண்மையில் தமிழ் அரசுக் கட்சியினர் தமது உள்ளூராட்சி உறுப்பினர்களுடனான கூட்டம் ஒன்றை நடத்தியிருந்ததும், அதில் கலந்துகொண்டு உரையாற்றிய சிவஞானம் சிறீதரன் எம். பி., பங்காளிக் கட்சிகள் பற்றியும் சுமந்திரன் பற்றியும் தெரிவித் திருந்த கருத்தையும், தனித்து தேர்தலில் போட்டியிடுவது அல்லது, அவர்களை வெற்றியடையாமல் செய்வது குறித்தும் பேசியது பற்றித்தான் அவர் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

'அது சிறீதரனின் விருப்பம். அதற்காக அது முடிவாகி விட்டது என்றல்ல. அவரைப் பொறுத்தவரை கிளிநொச்சியில் தமிழ் அரசு தனித்து நின்றாலும் தான் வெற்றிபெறலாம் என்று நம்புகின்றார். அதனால் அப்படி அவர் விரும்புகிறார் என்பதற்காக அது நடக்கும் என்று நான் நினைக்கவில்லை' என்றேன்.

அதற்கு அவர், 'சிறீதரன் சொல்லியிருந்ததை நானும் 'ஈழநாடு'வில் பார்த்தேன். ஆனால் அவர் கூறியதை பெரிதாகக் கொள்ளவில்லை. ஆனால், கொழும்பில் கூட்டமைப்பின் சுமந்திரனும் இதுகுறித்து ஒரு முக்கியமான ஒருவருடன் பேசியிருக்கிறார். அவர் அப்படி பேசினார் என்று அறிந்தேன்' என்றார் அவர்.

கடந்த தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கூட்ட மைப்புக்கு கிடைத்த மூன்று ஆசனங்களில் ஒன்று. கூட்ட மைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டுக்கு கிடைத்தது.

கூட்டமைப்புக்கு கிடைக்கும் வாக்குகளில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விருப்பு வாக்குகளைப் பெறுவதை மற்றையவர்களால் தடுக்க முடிவதில்லை. இது தமிழ் அரசில் எம். பியாக வர விரும்பும் பலருக்கு விருப் பத்துக்கு உரியதல்ல.

இதேபோல, கூட்டமைப்பில் தமிழ் அரசின் தனி ஆவர்த்தனத்திற்கு சிம்ம சொப்பனமாக திகழ்வது ரெலோ. அதன் அண்மைக்கால நடவடிக்கைகளையும் தமிழ் அரசுக் கட்சியால் இரசிக்க முடியவில்லை.

எப்போதும், மூன்றுபேர் சேர்ந்திருக்கின்றபோது, அதற்கு ஒருவர் தலைமை தாங்கினால், மற்ற இருவரும் அவர்களை தமது தலைவராகவும் அவர்கள் செய்வதை ஆதரித்துக் கொண்டும் பேசாமல் இருக்கவேண்டும். எப்போது மற்றவர்களும் தாங்களும் அந்த மூவரில் ஒருவர் என்று உணர்ந்து சற்று நிமிரத் தொடங்குகின்றார்களோ அப்போது மற்றவருக்கு- அதுதான் இதுவரை தலைவர் போல இருந்த வருக்கு இரசிக்க முடியாததாகத்தான் இருக்கும்.

அந்த நிலைதான் கூட்டமைப்பில் தமிழ் அரசுக்கு. கூட்டமைப்பில் தாமே 'தலை' என்று இருந்த நிலை கேள்விக்கு உள்ளாகும்போது அவர்களால் அதனை ஜீரணிக்க முடியாது தான்.

உள்ளூராட்சி உறுப்பினர்களுடனான தமிழ் அரசின் கூட்டத்திலும், தனித்துப் போட்டியிடுவது பற்றி சிறீதரன் பேசியபோது, அங்கிருந்தவர்கள், தனித்துப் போட்டியிட்டால் வெற்றிபெறமுடியுமா என்ற சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். கடந்த உள்ளூராட்சித் தேர்தலி லேயே பல உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றியபோதிலும் மிகச் சொற்ப வித்தியாசங்களிலேயே வெற்றிபெற முடிந்தது. இப்படியிருக்கையில், தனித்துப் போட்டியிட்டால் பங்காளிக்கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்துவார்கள், அப்படியெனில் தமிழ் அரசால் வெற்றிபெறமுடியுமா என்று பலரும் கேள்வி எழுப்பி யிருந்தனர்.

சுமந்திரனைப் பொறுத்தவரையில் அடுத்த தேர்தலில் விருப்பு வாக்குப் போட்டியிலிருந்து சித்தார்த்தனை வெளியேற்றவேண்டும், சிறீதரனைப் பொறுத்தவரை தான் தனித்து நின்றாலும் வெற்றிபெறலாம்.

எனவே, இவர்கள் இருவரும் தனித்துப்போகின்ற முடிவில் விருப்பமாக இருந்தாலும், அதனை மற்றையவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது தெரியவில்லை.

- ஊர்க்குருவி

# பலம்மிக்க ஆசியாவை நிறுவும் திட்டங்களை வகுக்கவேண்டும்

## ஜனாதிபதி ரணில் கோரிக்கை

கொழும்பு, செப். 16

இந்து சமுத்திரப் பிராந் தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்து, உலகிற்குத் திறந்து விடுவதன் மூலம் பலம்வாய்ந்த ஆசியாவை உருவாக்குவதற் கான திட்டங்களை வகுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

இந்து சமுத்திரப் பிராந் தியத்தில் சுதந்திரமான கடற் பயணத்தை உறுதிப்படுத்தி இலங்கையை கடல்சார் வர்த் தக கேந்திரமாக நிலைநிறுத்து வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டுமென வும் ஜனாதிபதி சுட்டிக்காட் டினார்.

தேசிய பாதுகாப்புக் கல்லூ ரியின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போதே ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புக் கல்லூ ரிக்கு விஜயம் செய்த ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட் டதுடன், ஜனாதிபதி பாது காப்புக் கல்லூரியில் கண் காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டில் சிறந்த தொரு பாதுகாப்பு முறைமை இல்லை என்றால் எமது எதிர்காலம் பாதிக்கப்படும் எனவும் உலக மற்றும் பூகோள அரசியலின் நிலைமை மிகவும் மோசமாகி விடும் எனவும் அது நாட்டுக்கு நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட தேசிய பாது காப்புக் கல்லூரியின் முத லாவது பட்டமளிப்பு விழா இதுவாகும், மேலும் இந்த நிறுவனத்தின் பாடநெறிக ளைப் பூர்த்தி செய்த 31 பேருக்கு ஜனாதிபதி பட்டங் களை வழங்கினார். (அ)

# இந்தியாவுக்கு செல்ல முயன்ற சிறுவர்கள் உட்பட 8 பேர் கைது

மன்னார், செப். 16

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற சிறுவர்கள் உட்பட 8 பேர் கடற்படையினரால் பேசாலை - தலைமன்னார் கடல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் விசேட சுற்றிவளைப்பின்போதே இவர் கள் கைது செய்யப்பட்டனர்.

18 வயதிற்கு மேற்பட்ட 3 இளைஞர்களும், பெண்களும், 18 வயதுக்கு குறைவான 3 சிறு வர்களும் இவ்வாறு கடற் படையினரால் கைது செய் யப்பட்டனர்.

கைதுசெய்யபட்டவர்கள் வவுனியா,திருகோணமலை மற்றும் தலைமன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.



கைது செய்யப்பட்ட வர்கள் கடற்படை ஊடாக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்ட நிலையில் பேசாலை பொலிஸ ார் விசாரணைகளின் பின்னர் நேற்று முன் தினம் மாலை மன்னார் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணை களை மேற்கொண்ட மன்னார் நீதவான் 18 வயதிற்கு மேற் பட்ட 5 பேரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதி யான சரீர பிணையிலும், ஏனைய 18 வயதுக்கு குறைந்த 3 பேரையும் நிபந்தனைகள் இன் றியும் விடுதலை செய் தார். (அ)

# வைத்தியசாலைகளில் வழமையான அறுவை சிகிச்சைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, செப். 16

சத்திர சிகிச்சைக்கான மருத் துவ உபகரணங்களை பாது காப்பதற்காக தமது வழமை யான சத்திர சிகிச்சைகளை பிற் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எஞ்சியுள்ள மருத்துவ உபக ரணங்கள் மற்றும் மருந்துகளை இதய சத்திர சிகிச்சை போன்ற உயிர்காக்கும் சத்திர சிகிச்சைக ளுக்கு முன்னுரிமை வழங்கப் படவேண்டும் என அரச மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மயக்க மருந்து, தொடர்பு டைய மருத்துவ உபகரணங் கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பற்றாக்குறை மற்றும் சிக்க லான சூழ்நிலைகளுக்கு சிகிச் சையளிக்கப் பயன்படுத் தப்படும் மருந்துகள் ஆகி யவை வழக்கமான மருத்துவ நடவடிக்கைகளில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன.

மருத்துவமனைகள் இந்த வழக்கமான செயற்பாடுகளுக் கான திகதிகளை ஆறு மாதங் களுக்கு முன்பே வழங்கியுள் ளன. மேலும் கொடுக்கப் பட்ட திகதியில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும் என நோயாளி நம்புகிறார்.

ஆனால், தற்போது மருந்து, உபகரணத் தட்டுப்பாடு நிலவி வருவதால், அறுவைச் சிகிச்சை செய்யாமல் நோயாளிகளை மருத்துவமனைகள் திருப்பி அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் எங்களின் தேவையை பூர்த் திச் செய்து நாங்கள் பயணம் செய்ததாகத் தெரிகிறது. அது முடிவடையும் நாள் மற்றும் திட்டத்தின் பின்னால் உள்ள நிர்வாக விவரங்கள் எங்களுக் குத் தெரியாது. புற்றுநோய் தடுப்பு மருந்துகளை இறக்கு மதி செய்ய வரவு -செலவுத் திட்டத்தில் 40 வீதம் ஒதுக்கப் பட்டுள்ளது. அந்த இறக்குமதி கள் முன்னுரிமையைக் கண்ட றிந்து செய்யப்பட்டதா என் பது எங்களுக்குத் தெரியாது.

அதனால்தான், பிரச்னை களை விவாதிக்க தொழில்நுட் பக் குழுவைக் கோரினோம். அண்மையில் சுகாதார அமைச் சின் அதிகாரிகளுடனான கலந்து ரையாடலின் மூலம் ஒருங்கி ணைப்பில் சிக்கல் இருப்பது உறுதி செய்யப்பட்டது-என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu
16.09.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 31

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்கா தொடர்பான பொய் பிரசாரங்கள்?

சர்வதேச சமூகம் மற்றும் பலம்பொருந்திய நாடுகளின் தலையீடுகள் தொடர்பில் சாமானிய தமிழ் மக்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை. இதேவேளை, அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் – ஏன் பல பாராளுமன்ற உறுப்பினர்களால்கூட இந்த விடயங்களை விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இதனால் சமானிய மக்களை குழப்பும் வகையிலேயே கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்ற சிங்கள அரசியல்வாதிகள் அமெரிக்கா தொடர்பில் போலிப்பிரசாரங்களை முன்னெடுக்கும்போது, மறுபுறும் தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்து செயல்படுவதாக கூறிக்கொள்ளும் சிலரோ அமெரிக்கா தொடர்பில் வேறு தகவல்களைக் கூறிவருகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளின் கூற்றுக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிங்கள இனவாதிகளின் போலிப் பிரசாரங்களுக்கே பயன்படுகின்றன.

தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையில் மூவரடங்கிய குழுவினர் கடந்த ஆண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு சென்றிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபுணர் குழுவென்னும் பெயரிலேயே குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பெயரில் சென்றதாகக் கூறப்பட்டபோதிலும்கூட, அமெரிக்க தூதரகம் அதனை உறுதிப்படுத்தவில்லை. ஆனால், சந்திப்புக்கள் முடிவடைந்து நாடு திரும்பிய பின்னர் எம். ஏ. சுமந்திரன் அமெரிக்கா தொடர்பில் சில விடயங்களை பொதுவெளிகளில் தெரிவித்திருந்தார்.

அதாவது, அமெரிக்கா சில உறுதியான முடிவுகளை எடுக்கவுள்ளது. அதனை நீங்கள் 2022 ஜனவரியில் காணலாம் என்றவாறான கருத்துக்களை முன்வைத்திருந்தார். ஆனால், அவ்வாறானதோர் எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெற்றுவரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது, அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்திருக்கும் கருத்துக்களை நோக்கினால், அவைகள் எவையும் புதிய விடயங்களல்ல.

இலங்கையின் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்தும் வெளிப்படுத்திவரும் விடயங்களே மீளவும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவின் முன்னணி செனட்டர்கள் சிலர் ஒன்றிணைந்து பிரேரணை ஒன்றை முன்வைத்திருக்கின்றனர். அதிலும்கூட, கடுமையான நிலைப்பாடுகள் தொடர்பில் எதுவுமில்லை. பொதுவாகவே விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. போர் குற்றங்களுக்கு பொறுப்பு கூறுவதற்கான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைக்கு குவாட் நாடுகள் (அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா) ஆதரவு வழங்க வேண்டுமென்றே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளை, இன சிறுபான்மைகள் என்னும் அடிப்படையிலேயே தமிழர் விடயம் நோக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகள் விவகாரம், அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் ஓர் அங்கமாகும். இதில் மாறுபட ஒன்றுமில்லை. எனவே, உலகளாவிய மனித உரிமைகள் விவகாரங்களில் அமெரிக்கா அதன் கரிசனையை வெளிப்படுத்தும். சுமந்திரன் போன்றவர்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் ஜெனிவாவுக்கு செல்வதற்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அமெரிக்காவின் உலகளாவிய அணுகுமுறையென்னும் அடிப்படையில்தான் இந்த விடயங்கள் அணுகப்படுகின்றன – அணுகப்படும்.

ஆனால், இங்கு நடப்பதோ வேறு. அதாவது, தங்களை கெட்டித்தன மானவர்களாகக் காண்பிப்பதற்கான ஒரு துருப்புச் சீட்டாகவே இவ்வாறான விடயங்களை சிலர் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். தங்களால்தான் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதான போலியான பிரசாரங்களை மக்கள் மத்தியில் முன்னெடுத்து, அதன் மூலம் தங்களின் வாக்கு வங்கியை அதிகரிக்கலாமென்று ஆசை கொள்கின்றனர். இது அடிப்படையில் தவறானதாகும்.

# அஞ்சலிப்பதில் அரசியல் வேதனை அளிக்கின்றது!

**சீ. வீ. கே. சிவஞானம்**

*யாழ்ப்பாணம், செப். 16*

“அஞ்சலிப்பதில் ஏன் அரசியலைக் கலக்கின்றீர்கள் என்று தெரியவில்லை. அது மிகவும் வேதனை அளிக்கின்றது. அனைவருக்கும் பிரச்னைகள் உள்ளன. உங்களுடைய அரசியலை வெளியே வைத்துக் கொள்ளுங்கள் திலீபனை நேசிப்பவர்கள் திலீபனை அஞ்சலியுங்கள். ஏன் முரண்படுகின்றீர்கள்?”, இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

தியாகதீபம் திலீபன் நினைவுநாளான நேற்று நினைவு தூபியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவர் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு ஜனநாயகப் போராளிகளுடன் நானும் சென்றிருந்தேன். அந்த நிகழ்வை தூரத்தில் நின்று பார்வையிட்டேன். தூபியின் முன்றிலில் விரும்பத்தகாத சம்பவம் இடம்பெற்றது மிகவும் வேதனை அளிக்கின்றது.

திலீபனுக்கு உலகத்திலேயே எத்தனை தூபிகள் இருந்தாலும் திலீபன் உண்ணாவிரதம் இருந்தது இந்த நல்லூரிலே. எனவே, இந்தத் தூபிதான் அடிப்படையான தூபி. எல்லோராலும் ஏற்கப்படுகின்ற தூபி. இந்த தூபியானது என்னுடைய சொந்த பணத்தில் எனது முயற்சியால் கட்டப்பட்டு அது மீண்டும் புனர்நிர்மாணமும் செய்து வைக்கப்பட்டது. யாரும் இந்த தூபிக்கு உரிமை கோர முடியாது.

ஆனால், அவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நான் ஆணையாளராக இல்லாவிட்டால் அந்த இடத்தில் தூபியை கட்டியிருக்க முடியாது. அஞ்சலிப்பதில் ஏன் அரசியலைக் கலக்கின்றீர்கள்



என்று தெரிய வில்லை. அது மிகவும் வேதனை அளிக்கின் றது. அனைவருக்கும் பிரச்னைகள் உள்ளன. உங்களுடைய அரசியலை வெளியே வைத்துக் கொள்ளுங்கள் திலீபனை நேசிப்பவர்கள் திலீபனை அஞ்சலியுங்கள். ஏன் முரண்படுகின்றீர்கள்?

கடந்த வருடங்களில் சுதந்திரமாக நினைவேந்தலை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு அனுமதிக்குமாறு நான் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் எழுதினேன். எழுதிய அதே வசனத்தை எனக்கு மீண்டும் பதில் அளித்து அனுப்பியதன் பிரகாரம் இம்முறையும் எந்த வித தடை யும் இன்றி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு சுதந்திரமாக நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எங்களுக்குள்ளே நாங்கள் முரண்பட்டுக் கொள்வது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மிகவும் வேதனை அளிக்கின்றது - என்றார். (ஐ-3)

# தியாகி திலீபனை நினைவுகூர ஈ. பி. டி. பி. கட்சியினர் எதிர்ப்பு!


*யாழ்ப்பாணம், செப். 16*

வேலணை பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று நடந்தபோது தியாகி திலீபனுக்கு நினைவஞ்சலி செலுத்த வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், ஆளும் கட்சியினரான ஈ. பி. டி. பியினர் இந்தக் கோரிக்கையை நிராகரித்து சபையை ஒத்திவைத்திருந்தனர் .

ஆனால் சபை ஒத்திவைக்கப்பட்ட நேரத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களால் தியாகி திலீபனுக்கான நினைவேந்தல் உணர்பூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது .

இதே தருணத்தில் வேலணை வங்களாவடிச்சந்தியில் பிரதேச சபைக்கு முன்பா அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவுத்தூபியில் தீவகம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள் , உறவினர்கள் , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் , வட மாகாணசபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் , ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் , யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன், யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் ஈசன், வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான கருணாகரன் நாவலன் , செ. பார்த்தீபன், தங்கராணி , யசோதினி , பிரகலாதன், சிறீபத்மராசா , வசந்தகுமாரன் , அசோக்குமார் , பிலிப் பிரான்சிஸ் , ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி ), கனகையா மற்றும் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் இணைப்பாளர்களான குயிலன், கந்தசாமி உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ-3)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 16 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 31
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அதிதி




**மேடம்**
உங்கள் செயல்களில் எதிர்பார்த்த நன்மை அடைய முடிய தாமதம் ஏற்படும்.உங்கள் கவனக்குறைவால் பணிகளில் தடுமாற்றம் ஏற்படும். நிதானத்துடன் செயல்பட வேண்டும்.

**இடபம்**
பணியிடத்தில் வேலை பளு அதிகரிக்கும். திடீர் செலவுகள் அதிகரிக்கும்.நிதானம் தேவையான நாள். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பு அதிகரிக்கும். கடன் வாங்கி செலவு செய்வீர்கள்.

**மிதுனம்**
அரசு வழியிலான முயற்சி லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் நிதிநிலை உயரும். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கடகம்**
உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும்.புதிய திட்டங்கள் தீட்டி செயல்படுவீர்கள். நண்பர்கள் உதவியுடன் முயற்சி பலிதமாகும். பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். நிதிநிலை உயரும்.

**சிம்மம்**
உற்சாகமாக செயல்படுவீர்கள்.நீங்கள் நினைத்திருந்த ஒரு செயலை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும். முயற்சி சிறு சிறு தடைக்குப்பின் நிறைவேறும். எதிர்பார்த்த பண வரவு உண்டு.

**கன்னி**
எதிர்பார்த்த செயல்களில் பின்னடைவு,எதிர்ப்பு உண்டாகும். புதிய முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம். நிதானம் காப்பது நன்மையாகும்.மற்றவரை நம்பி எந்தப்பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம்.

**துலாம்**
நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செயல்களில் நிதானம் அவசியம். இன்று மாலை வரை குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**விருட்சிகம்**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும்.பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**தனுசு**
சிந்தித்து செயல்படுவதால் நன்மை அதிகரிக்கும். கடும் முயற்சிக்குப்பின் உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள். பெற்றோர் வழியே நன்மையுண்டு. விலகிச் சென்றவர் விரும்பி வருவர்.

**மகரம்**
உங்கள் மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்களுடைய எண்ணம் நிறைவேறும். முயற்சியால் லாபம் அடைவீர்கள்.

**கும்பம்**
திட்டமிட்டு செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தடைபட்டிருந்த செயல் நிறைவேறும். முயற்சி வெற்றியாகும்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சரி செய்வீர்கள். உங்கள் வருமானம் உயரும்.வார்த்தைகளில் கவனம் தேவை. பணியிடத்தில் மற்றவர்களை அனுசரித்து செல்வீர்கள்.பொருளாதார நிலை உயரும்.

# இது இந்தியா; ஹிந்தியா அல்ல! தமிழை அரச மொழியாக்குக!!

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, செப். 16

இது ஒருமைப்பாடு மிக்க இந்தியா. அதனை "ஹிந்தி"யா என்ற பெயரில் பிளவுபடுத்தி பார்க்கும் முயற்சிகள் வேண்டாம். உள்ளூர் மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் தமிழ் உட்பட 22 மொழிகளையும் ஹிந்திக்கு இணையாக அலுவல் மொழியாக விரைவில் அறிவிக்க வேண்டும். என்று கூறியுள்ளார் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

ஹஹிந்தி திவாஸ் "தினத்தையொட்டி குஜராத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா," நமது கலாசாரம் மற்றும் வரலாற்றின் ஆன்மாவைப் புரிந்து கொள்ள அலுவல் மொழியான ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

அதில், "கலாசாரத்தையும் வரலாற்றையும் புரிந்துகொள்ள ஹிந்தி மொழியை கற்றுக் கொள்ள வேண்டும் என்பது பல மொழிகளை பேசும் மக்களை கொண்ட இந்திய ஒன்றியத்தின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற பண்பாட்டுக்கு நேர் எதிரானது. ஹிந்தி என்ற மொழி உருவாவதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழை முதன்மையாக கொண்ட திராவிட மொழிக் குடும்பமும், அதன் பண்பாட்டு விழுமியங்களும் இன்றைய இந்திய ஒன்றிய நிலப்பரப்பையும் அதன் எல்லைகளையும் கடந்து பரவியிருந்ததை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழையும் மற்ற மாநில மொழிகளையும் பின்னுக்குத் தள்ளி ஹிந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்கிற கட்டமைப்பை உருவாக்க நினைப்பது ஆதிக்கத்தின் வெளிப்பாடே ஆகும். அலுவல் மொழியான ஹிந்தியின் ஆதிக்கத்தில் இருந்து தமிழ் உள்ளிட்ட இந்தியாவின் தனித்தன்மை மிக்க மொழிகளை காப்பதற்காக அரசியல் சட்டத்தின் வழியே போடப்பட்ட வேலிதான் இணை அலுவல் மொழி என்ற ஆங்கிலம். அந்த வேலி இன்றளவும் வலுவாக இருப்பதால்தான் செம்மொழியான தமிழ் மொழியை ஆதிக்க மொழி ஆடுகளால் மேய முடியவில்லை.

ஹிந்தி மொழியால் மட்டுமே இந்திய மக்களை ஒன்றிணைக்க முடியும் என்ற தவறான கருத்தை மத்திய பா. ஜ. க.அரசு திணித்து வருகிறது. ஹிந்தி மொழி மீதான முன்னுரிமை பல்வேறு மாநிலங்களில் உள்ள மக்களிடையே தேவையற்ற அதிருப்தியை உருவாக்கி அவர்களைப் பிரிக்கிறது.

இது ஒருமைப்பாடு மிக்க இந்தியா. அதனை ஹஹிந்தி"யா என்ற பெயரில் பிளவுபடுத்தி பார்க்கும் முயற்சிகள் வேண்டாம். உள்ளூர் மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் தற்போது இடம்பெற்றுள்ள 22 மொழிகளை ஹிந்திக்கு இணையாக அலுவல் மொழியாக விரைவில் அறிவிக்க வேண்டும். நமது அனைத்து மொழிகளையும் அதிகாரபூர்வ மொழிகளாக ஆக்க வேண்டிய நேரம் இது. ஹிந்தி தினத்துக்குப் பதில் இந்திய மொழிகள் நாள் எனக் கொண்டாடி கலாசாரத்தையும் வரலாற்றையும் வலுப்படுத்துங்கள்" என்று கூறியுள்ளார். (ஐ)

# மாணவர்க்கு காலை சிற்றுண்டி தொடக்கி வைத்தார் முதல்வர்!

மதுரை, செப். 16



பாடசாலை மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை மதுரையில் தொடங்கி வைத்த முதல்வர் மு. க. ஸ்டாலின், மாணவர்களுக்கு உணவை ஊட்டி விட்டு அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

அரசாங்கத்தின் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவி களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

முதல்கட்டமாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் கிராமங்களில் உள்ள 1,545 பாடசாலைகளில் இத் திட்டம் செயல்படுத் தப்படுகிறது. முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாளான நேற்று இத்திட்டத்தை முதல்வர் மதுரையில் தொடக்கி வைத்தார். (ஐ)

# அண்ணா யாருக்கு சொந்தம் தி.மு.க., அ.தி.மு.க. மோதல்

சென்னை, செப். 16



முன்னாள் முதல்வர் அண்ணாதுரை எந்தக் கட்சிக்கு சொந்தம் என தி. மு. க., அ. தி. மு. க. கட்சிகளை சேர்ந்தவர்கள் மோதியதால் பதற்றம் நிலவியது.

திருச்சி - மணப்பாறை பேருந்து நிலையம் அருகே அறிஞர் அண்ணா சிலை உள்ளது. திராவிட கட்சிகளில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்த சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்துவது வழக்கம்.

வழக்கம்போல், நேற்று அண்ணாவின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திராவிட கட்சியினர் ஊர்வலத்துக்கும், மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வந்தது.

இதில் அண்ணா சிலை உள்ள பகுதியில் தி. மு.கவினர் கட்சி கொடிகளை அமைத்தும், பந்தல் அமைத்தும் இருந்தனர். இதனையடுத்து அங்கு வந்த அ. தி. மு. கவினர் தங்கள் கட்சி கொடியையும், இரட்டை இலை சின்னங்களையும் சிலைக்கு அருகில் அமைத்ததால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அண்ணா யாருக்கு சொந்தம் என்பதில் வாக்குவாதம் முற்றி மோதல் ஏற்படும் நிலையில், நிகழ்விடத்துக்கு சென்ற பொலிஸார் இரு தரப்பையும் அமைதிப்படுத்தினர்.

பிறந்தநாள் ஊர்வலம் நடப்பதற்கு முன்னதாகவே அண்ணா யாருக்கு சொந்தம் என்பதில் தி. மு. க. -அ. தி. மு. க. கட்சியினருக்கிடையே ஏற்பட்ட மோதல் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. (ஐ)

# இலங்கை மீதான தீர்மானத்தை நீடித்து வலுப்படுத்த வேண்டும்!

## அமெரிக்க செனட் குழு கோரிக்கை

**நியூயோர்க், செப். 16**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான 46/1 தீர்மானத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும், 2 ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்றும் அமெரிக்க செனட்டர்களால் கோரிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.**

ராஜபக்ஷ குடும்பத்தின் மோசமான நிர்வாகம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளால் சவாலுக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண ஒரு விரிவான சர்வதேச அணுகுமுறை தேவை என்றும் அமெரிக்க செனட் வெளியுறவுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறும் தீர்மானத்தை நீடிக்க வேண்டும் என்று கோரும் இந்தக் குழு, பொறுப்புக்கூறும் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான இலங்கை மக்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்று இலங்கை பாதுகாப்புப் படைகளையும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் சிறுபான்மை இனக் குழுக்களுடனும், எதிர்க்கட்சிகளுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்து செயற்படவேண்டும் என்றும் அமெரிக்க செனட் வெளியுறவுக் குழு தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் இலங்கை தற்போது மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது. இலங்கைக்குச் சர்வதேச சமூகம் வலுவான ஆதரவை வழங்கும் நிலையில், போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் முன்னுரிமையாக இருப்பதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் பாப் மெனெண்டஸ் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மன்னார் தொடர்பாக கதைக்க டயானவுக்கு அருகதை இல்லை!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம். பி.

**மன்னார், செப். 16**

மன்னார் மாவட்டத்துக்கெனத் தனித்துவமான கலை கலாசாரம் உண்டு. எனினும், மன்னார் மாவட்டம் தொடர்பாக தரக் குறைவாக பேசுவதற்கு இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயுக்கு எவ்வித அருகதையும் இல்லை. அவரது கருத்துக்கு கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

புதிதாக இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டம் தொடர்பாக கோபத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தை ஊடகங்கள் ஊடாக தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தை ஒரு களியாட்ட இடமாகவும், குறிப்பாக தன்னை சிறு வயதில் கருவாடு காய வைப்பதற்கு மன்னாருக்கு அனுப்ப உள்ளதாக பயமுறுத்தி வளர்த்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அவரின் கருத்தை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். மன்னார் மாவட்டம் மிகவும் கலை,கலாசார பண்புகள், கடல் வளம், விவசாய வளம் அனைத்தோடு பொருந்தியதாக அமைந்துள்ளது. தற்போது கல்வியில் தலைசிறந்து விளங்கி காணப்படுகின்றது.தற்போதைய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த காலங்களை விட இம்முறை உயர்ந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம், மடு திருத்தலம் ஆகிய இரு பழமை வாய்ந்த திருத்தலங்கள் உள்ளன. எனவே மன்னார் மாவட்டத்தின் கலை கலாசார பண்புகள் தெரியாமல், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஊடகங்கள் முன் கதைப்பது கண்டிக்கத்தக்க விடயம் என்பதோடு, இப்படிப்பட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கிய ஜனாதிபதி அதனை பரிசீலிக்கவேண்டும்.

குறித்த பெண் சில காலங்களுக்கு முன் பாராளுமன்றத்தில், நாட்டில் கஞ்சா வளர்ப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும். கொழும்பை இரவு நேர களியாட்ட வலயமாக மாற்ற வேண்டும் என்று பாராளுமன்றத்தில் பேசி இருந்தார். அவருடைய செயல்பாடுகள் தொடர்ச்சியாக இவ்வாறு இருக்கும் போது அவருக்கு இராஜாங்க அமைச்சு பொறுப்பு வழங்கியமை குறித்து ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# கட்டணம் செலுத்தாவிடின் நீர் விநியோகம் துண்டிப்பு

## எம்.பிக்களுக்கு எச்சரிக்கை

**கொழும்பு, செப். 16**

நீர்க் கட்டணம் செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு நீர் விநியோகத்தை நிறுத்துமாறு பணிப்புரை கிடைத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

சட்டமூலங்களுக்கு தீர்வு காணப்படாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் சபாநாயகருக்கு அறிவிக்கப்படும் என வர்த்தகப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் நீர்க் கட்டணத்தைச் செலுத்தாததால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 3 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# சுற்றுலா,கல்வியை மேம்படுத்த நேபாளம்-இலங்கை ஒப்பந்தம்

**கொழும்பு, செப். 16**

இலங்கையின் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி மற்றும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் நேபாளத்துக்கும் இலங்கைக்கும் இடையில் இரு தரப்பு உடன்படிக்கையை எட்டுவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் இலங்கைக்கான நேபாளத் தூதுவர் பசு தேவ் மிஸ்ரா கலந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலின் போது இரு நாட்டு இளைஞர்களும் பல்கலைக்கழக கல்வி மற்றும் சுற்றுலாத்துறை வாய்ப்புகளில் இணைவதற்கு இளைஞர் பரிமாற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உடன்பாடு எட்டப்பட்டது. இந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாக நடவடிக்கைகளை இலங்கையின் வெளி விவகார அமைச்சர் மற்றும் நேபாள அரசாங்கம் மேற்கொள்ளும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குறைந்த விலையில் யூரியா உரத்தை வழங்க நடவடிக்கை!

**கொழும்பு, செப். 15**

50 கிலோகிராம் யூரியா உர மூடையை, சந்தை விலையை விடவும் குறைந்த விலையில் பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்ய, கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையங்களை வலுவூட்டும் பல்துறைசார் கூட்டுப் பொறிமுறை ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம், நாட்டின் மொத்த அரிசித் தேவையில் 3.6 மில்லியன் மெற்றிக் தொன்களும், வருடாந்த வெங்காய தேவையில் 50 சதவீதமும், உருளைக் கிழங்கு தேவையில் 35 சதவீதமும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றுக்கான கால்நடைகளின் மேம்பாட்டுக்காக, வருடாந்தம் தேவைப்படும் 650,000 தொன் சோளத்தில், 80 சதவீதத்தை இந்த ஆண்டுக்குள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பெரும்போகத்தில் நெல் மற்றும் சோளம் ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தேவையான 230,000 மெற்றிக் தொன் இரசாயன உரத்தையும், 100,000 மெற்றிக் தொன் ரி. எஸ். பி. மற்றும் 182,000 மெற்றிக் தொன் எம். ஓ. பி. ஆகியவற்றை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய கடன் வசதிகளுடன் இறக்குமதி செய்வதற்கும், ஏனைய உணவு உற்பத்திக்குத் தேவையான உரத்தை தனியார் துறை மூலம் இறக்குமதி செய்வதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்கள் எடுத்துவந்தால் நடவடிக்கை

**கொழும்பு, செப். 16**

நாட்டில் தற்காலிக இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமற்ற பொருட்களை இரகசியமாக கொண்டு வந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமற்ற பொருட்களை இரகசியமாக கொண்டு வந்தால் அவற்றை பறிமுதல் செய்வது அல்லது மீள் ஏற்றுமதி செய்வது என்ற முடிவை இலங்கை சுங்கத்துறை எடுத்துள்ளது.

முன்னதாக இவ்வாறு நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பொருட்களை அபராதம் விதித்து விடுவிக்க சுங்கத்துறை நடவடிக்கை மேற்கொண்டது.

இருந்தபோதும் இனிமேல் அவ்வாறு செய்வதில்லை என சுங்கத்துறை உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட்டிருந்தால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில், இலங்கை சுங்கத்துறை கடுமையான தீர்மானங்களை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு உத்தியோகபூர்வ கையிருப்பை பாதுகாப்பதற்காக திறந்த கணக்கு முறையின் கீழ் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தை துஷ்பிரயோகம் செய்யும் எவருக்கும் எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

*திலீபனின் நினைவேந்தலில் குழப்பம்*

# சுகாஷின் செயற்பாட்டைக் கண்டித்தார் புலிகளின் மூத்த போராளி பஷீர் காக்கா!



யாழ்ப்பாணம், செப். 16

நல்லூரில் நேற்று இடம்பெற்ற தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் சட்டத்தரணி க. சுகாஷ் ஒலிபெருக்கி வாயிலாக அரசியல் கருத்துக்களை தெரிவித்தார். இதன்போது நினைவேந்தலில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகளின் மூத்த போராளி முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா), நினைவேந்தல்களில் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்தவேண்டாம் என தெரிவித்தார். இதனால் அங்கு சிறிய சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா) வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், திலீபனின் நினைவேந்தல் மட்டுமல்ல எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்தவேண்டாம் என தயவுடன் வேண்டுகிறேன்- அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் மாவீரர் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்த ஆண்டின் திலீபன் நினைவு ஆரம்ப நிகழ்வு தொடங்கும் முன்னர் பிறிதொரு அணியினரை சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகிறது. நேற்று இவர் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டாளரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன் மாஸ்டரிடம் இந்நிகழ்வை பொதுநிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்னவென்று கேட்டேன். எதுவும் இல்லை எனப் பதிலளித்தார். அது திருப்தி அளித்தது.

அந்த நம்பிக்கையை சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி சுகாஷ் இன்றைய தினம் (நேற்று) நடந்து கொண்டார். ஏற்கனவே மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளை தாக்கும் களமாக பயன்படுத்த வேண்டாம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

அதனைக் கடைபிடிப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார். எனினும் கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சாடியமை பற்றி செய்தி பத்திரிகையில் வெளியானபோது மிகவும் வேதனைப்பட்டேன்.

அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக பொன் மாஸ்டரை சந்தித்து உரையாடினேன். எனவே இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்து கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகிறேன் - என்று கூறியுள்ளார். (அ-03)



# 434 கிலோ கேரள கஞ்சாவுடன் இந்திய மீனவர் ஐவர் சிக்கினர்

கொழும்பு, செப். 16

434 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் இந்தியர்கள் ஐவர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட கடல் ரோந்து நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புத்தளம் குதிரைமலை கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட இந்தியர்களின் படகுகளைப் பரிசோதனைக்கு உட்படுத்திய போதே இவ்வாறு கேரளக் கஞ்சா காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களிடமிருந்து மீட்கப்பட்ட கேரளக் கஞ்சாவின் பெறுமதி 130 மில்லியன் ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் புத்தளம் - கல்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# மில்கோ நிறுவனத்தில் டீசல் மோசடி!

கொழும்பு, செப். 16

மில்கோ நிறுவனத்துக்கு சொந்தமான அம்பேவெல தொழிற்சாலையில் பெருமளவிலான டீசல் மோசடி இடம்பெற்றுள்ளதாக அதன் தலைவர் ரேணுகா பெரேரா தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு முதல் இந்த மோசடி இடம்பெறுகின்றது எனவும், தொழிற்சாலைக்குச் சொந்தமான 45,000 லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து விரிவான விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஊழியர்கள் அனைவரும் விசாரணை முடியும் வரை கட்டாய விடுப்பில் வைக்கப்படுவதாகவும் விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் மில்கோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

இந்த வருடத்திலும் இந்த எரிபொருள் மோசடி இடம்பெற்றதா என்பதை கண்டறிய விரிவான விசாரணை நடத்துமாறும் தலைவருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். (அ)

# தாமரை கோபுரத்தில் சர்வதேச முதலீடுகள்!



கொழும்பு, செப். 16

தாமரைக் கோபுரத்தில் தேசிய, சர்வதேச முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் 22 முதலீட்டாளர்கள் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தாமரைக் கோபுரம் தனியார் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ் வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 15 உற்சவங்களை நடத்துவதற்கான ஒப்பந்தம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

தாமரைக்கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் முடிவடைந்தது. சீன நிறுவனத்திடமிருந்து வழங்கப்பட்டுள்ள கடன் நிதியை 2024 ஆம் ஆண்டுக்குள் மீளச் செலுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் இருந்து சீனா பயணித்தவருக்கு கோவிட்!

கொழும்பு, செப். 16

இலங்கையில் இருந்து வருகை தந்த சீனப் பிரஜை ஒருவருக்கு கோவிட் - 19 தொற்று ஏற்பட்டுள்ளதாக ஷங்காய் (சீனா) சுகாதார ஆணையம் நேற்று தெரிவித்துள்ளது.

சீன ஊடகங்களின்படி, வெளிநாடுகளுக்கு சென்று வந்த எட்டு பேரில் ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவராவார்.

முதல் நோயாளி இலங்கையிலிருந்து செப்ரெம்பர் 10 ஆம் திகதி ஷங்காய் புடோங் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த சீனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனையவர்கள் நியூசிலாந்து, அமெரிக்கா, தென் கொரியா மற்றும் கனடாவில் இருந்து சீனாவுக்கு சென்றுள்ள னர்.

அனைத்து நோயாளிகளும் சிகிச்சைக்காக நியமிக்கப்பட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் அவர்களுடன் அதே விமானங்களில் நெருங்கிய தொடர்பு கொண்ட 32 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். வலயப் பாடசாலை அதிபர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த செயலமர்வில் பாடசாலையின் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கல்வி நிர்வாக விடயங்கள் குறித்த கலந்துரையாடலும் இடம்பெறவிருப்பதால் யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீதுவ விகாராதிபதி கொலை: பிக்கு ஒருவர் கைதாகினார்!

கொழும்பு, செப். 16

சீதுவை - வேத்தேவ பகுதியிலுள்ள விகாரையின் விகாராதிபதி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த விகாரையில் இருந்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை டுபாய் செல்ல முற்பட்டபோது குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

18 வயதான குறித்த பிக்கு தற்போது சீதுவை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்வது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# வீட்டுத் தோட்டத்துக்கு வழங்கும் விதைகள் முளைதிறன் அற்றவை

## கிளிநொச்சி விவசாயிகள் சுட்டிக்காட்டு அவதானம் செலுத்துமாறு டக்ளஸ் பணிப்பு

கிளிநொச்சி, செப். 16

**வீட்டுத் தோட்டத்திற்காக வழங்கப்படும் விதைகள் முளைதிறன் அற்றதென விவசாயிகள் சுட்டிக்காட்டிய நிலையில், இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்பு விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் இந்த விடயம் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

வீட்டுத் தோட்டத்திற்காக வழங்கப்படும் விதைகள் முளைதிறண் அற்றவையாக காணப்படுகின்றதென விவசாயிகள் சுட்டிக்காட்டினர். சமுர்த்தி திணைக்களத்தினால் இவை வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்கப்படும் விதைகள் உரிய முறையில் விதைக்கப்படுகிறதா எனக் கண்காணிப்பதில்லை. பயனாளி தெரிவிலும் கவனம் செலுத்த வேண்டும். காணி, கிணறு இல்லாதவர்களுக்கும் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கிய பின் அது தொடர்பில் மீளாய்வு செய்வதில்லை. சிலர் விற்கின்றனர். இன்னும் சிலர் அதை உணவாக்குகின்றனர். விதை தானியங்களை பாதுகாக்க மருந்திடப்பட்டுள்ளது என்ற ஆலோசனை பயனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் நஞ்சை உணவாக்குகின்றனர் என விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் விதைகள் உற்பத்தி திணைக்கள அதிகாரி குறிப்பிடுகையில்,

விதைகள் பொதியிடப்பட்டு 2 வாரங்களுக்குள் பயிரிடப்படாவிட்டால், முளைதிறன் குறைவானதாக இருக்கும் என தெரிவித்தார்.

பதிலளித்த அமைச்சர்,

நீங்கள் இரு வாரத்துக்குள் விதைக்கப்பட வேண்டும் என்கின்றீர்கள். சமுர்த்தித் திணைக்களம் இதுவரை வழங்கப்பட்ட புள்ளி விவரம் கிடைக்கவில்லை என்கிறது.

இவ்வாறு இழுபறி நிலை காணப்பட்டால், கால தாமதம் ஆகும். இதனை சீர் செய்வது தொடர்பில் ஆராய வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை, தாம் மருத்துவ தாதியர் ஊடாக மேற்கொண்ட கள ஆய்வினடிப்படையில், கிளிநொச்சி நகர் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் வீட்டு தோட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணி சிறியது என்பதால், நகர் பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை. சாடிகளை பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி வித்தமையும் குறிப்பிடத் தக்கது. (அ)



# தியாகதீபம் திலீபனின் நினைவு நேற்று மல்லாவியில் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி, செப். 16

பாரத தேசத்திடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தன் வாழ்வை தமிழரின் விடுதலைக்காக ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மல்லாவியில் சிறப்பாக இடம்பெற்றது

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து காங்கேசன்துறையில் ஆரம்பித்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ஊர்தி வழி கையெழுத்துப் போராட்டம் நேற்று காலை முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி நகரை வந்தடைந்த நிலையில் அங்கு தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நீக்கக் கோரி நாடு தழுவிய ஊர்தி வழி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தியாக தீபம் திலீபனின் நினைவாக அகவணக்கம் செலுத்தப்பட்டு சுடர் ஏற்றி அஞ்சலி இடம்பெற்றது

(அ)

# மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல்

கொழும்பு, செப். 16

எதிர்வரும் ஆண்டு மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் ஒன்று நடத்தப்படும் என எதிர்ப்பார்க்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலொன்றை நடத்துவதற்கான அதிகாரம் காணப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதி உறுதிப் படுத்தப்படும் என எதிர்ப்பார்க் கப்படுகின்றது. (அ)

# மூன்று நாள்களுக்கு ஒரு முறை கோழி இறைச்சி விலை உயர்வு

கொழும்பு, செப். 16

சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சி 1,450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன்,ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் 50 ரூபா அதிகரிக்கப்படுவதாக கோழி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம். இக்பால் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 15 பாரிய கோழிப்பண்ணையாளர்கள் எடுத்த முடிவின்படி கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்படவேண்டும்.

தேவைக்கு ஏற்ப, தேவையான கோழி இறைச்சி இருப்பு உள்ளது. நாங்களும் அவர்களிடம் இருந்து கொள்முதல் செய்கிறோம். மூன்று நாட்களுக்கு ஒருமுறை, கோழி இறைச்சிக்கு 50 ரூபா விலை உயர்வை அவர்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் எப்போதும் விலை நிர்ணயம் குறித்து கூட்டு முடிவுகளை எடுப்பார்கள். இதன் விளைவாக, எங்கள் நுகர்வோரை எதிர்கொள்ள முடியவில்லை. அவர்களில் பெரும்பாலோர் எங்களை விமர்சிக்கிறார்கள். இந்நிலையில், கோழி தீவனத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கோழிப்பண்ணையாளர்கள் புலம்புகின்றனர்.

இந்நிலையில், முட்டைக்கு விதித்துள்ளதை போல், கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்ய, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், தொழில் நலிவடைந்து, கோழிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதி கரிக்கும்-என்றார். (அ)

# உறங்கு நிலையிருந்து மாறி இயங்கு நிலை மன்றங்களாக புத்தெழுச்சி பெறவேண்டும்

## கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்கள புதிய பணிப்பாளர் சரண்யா கோரிக்கை

அம்பாறை, செப். 16

'கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழுள்ள சகல கலை, இலக்கிய மன்றங்களும் உறங்கு நிலைமாறி, இயங்கு நிலை மன்றங்களாக புத்தெழுச்சிபெற வேண்டும்.'

இவ்வாறு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்சன் கூறினார்.

நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலை, இலக்கிய மன்றங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராகப் பதிவியேற்ற தைத் தொடர்ந்து திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள கலை, இலக்கிய மன்றங்களின் பிரதிநிதிகளுடன் நடத்தி வரும் கூட்டங்களின் வரிசையில், இந்தக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்பட்ட மன்றங்களின் செயற்பாடுகள், கருத்துக்கள், பதிவு செய்யப்படாத மன்ங்களைப் பதிவு செய்தல்இ புதுப்பித்தல், கலை மன்றங்களின் ஆலோசனைகள் என்பன தொடர்பில் இதன் போது கலந்துரையாடப் பட்டன.



அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக்கின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லதீப் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தொடர்ந்து உரையாற்றுகையில்-

பதிவு இலக்க மொன்றைப் பெற்றுக்கொள்வதோடும் மட்டும் கலை, இலக்கிய மன்றங்களின் நோக்கு நிறைவு பெற்றுவிடமுடியாது.

இத்தகைய மன்றங்கள் ஸ்தாபிக்கப்படுவதன் முழு நோக்கமும் நிறைவேறும் வகையில் அவற்றின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

நாட்டின் சூழ்நிலைகள் மற்றும் அசமந்தங்களால் பலகலை மன்றங்கள் உறங்கு நிலையிலேயே உள்ளன.

இந்நிலை தொடராது சகல கலைஇ இலக்கியமன்றங்களும் இயங்கு நிலைக்கு புத்தெழுச்சி பெறவேண்டும்.

இத்தகைய கலைமன்றங்களின் சிறந்த செயற்பாடுகளின் மூலமே கிழக்கின் பண்பாட்டு விழுமியங்களை சிறப்புற மிளிரச் செய்யவும், பாதுகாக்கவும் முடியும்.

தற்போதய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எதிர்காலத்தில் இக்கலை, இலக்கிய மன்றங்களை ஊக்குவிப்பதற்கான செயற்திட்டங்களை நாம் முன்மொழிந்துள்ளோம்.

ஒவ்வொருவாரமும் கலைஞர்கள் ஒன்று கூடவேண்டும், மன்றங்களின் மாதாந்தக் கூட்டங்கள் கிராமமாக நடைபெற வேண்டும். வாரம் ஒரு முறை கலாச்சார உத்தியோகத்தரின் கண்காணிப்பும் இதில் இடம் பெறும்.

மேலும் எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கின் இலக்கியவாதிகள் குறிப்பாக எழுத்தாளர்கள் கவிஞர்களின் ஆக்கங்களை நூலுருவாக்கும் திட்டம் தொடர்தேர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக நாம் வெளியிட்ட நூறு சிறுகதைகள் தொகுப்பு நூலின் இரண்டாம் பாகமும் தடையின்றி வெளியிடப்படும்-என்றார்.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீப், மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், நிர்வாக உத்தியோகத்தர் சரின், பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப் ஆகியோரும் உரையாற்றினர். (அ-6)

# ராணி இரண்டாம் எலிசபெத் இறுதிச்சடங்கு:

## அழைக்கப்பட்டவர்கள், அழைக்கப்படாதவர்கள் யார்?

வரும் திங்கள்கிழமை (செப். 19) நடைபெற வுள்ள பிரிட்டனின் மகா ராணியின் இறுதிச்சடங்கு, கடந்த பல தசாப்தங்களில் அரச குடும்பத்தினர் மற்றும் அரசியல் தலைவர்களின் மிகப்பெரும் கூடுகையாக அமைய உள்ளது.

இறுதிச் சடங்குக்கான அழைப்பிதழ்கள் சென்ற வார இறுதியில் பல தரப்பினருக்கும் சென்றுள்ள நிலையில், சுமார் 500 அரசு தலைவர்கள் மற்றும் முக்கியப் வெளிநாட்டு பிரமுகர்கள் நிகழ்வில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.



பெரும்பான்மையான தலைவர்கள் வணிக விமானங்களில் வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் மேற்கு லண்டனில் உள்ள ஓரிடத்தில் இருந்து பேருந்துகள் மூலம் மொத்தமாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இறுதிச்சடங்கு நடைபெறவுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபே-யில், சுமார் 2,200 பேர் அமரும் வகையிலான இடவசதி உள்ளது.

இறுதிச்சடங்கில் யாரெல்லாம் பங்கேற்பார்கள், யாரெல்லாம் பங்கேற்க மாட்டார்கள் என்பது குறித்து இதுவரை நாம் அறிந்துள்ள தகவல்கள்:

**ஐரோப்பிய அரச குடும்பத்தினர்**

ஐரோப்பா முழுவதிலும் உள்ள அரச குடும்ப உறுப்பினர்கள், அவர்களில் பெரும்பாலானோர் ராணியின் ரத்த சொந்தங்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்ஜியம் அரசர் பிலிப் மற்றும் ராணி மதில்டே தங்கள் வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர். அதேபோன்று, அரசர் வில்லியம்-அலெக்சாண்டர் மற்றும் அவருடைய மனைவி ராணி மக்ஸிமா, அரசரின் தாயும் முன்னாள் டச்சு ராணி இளவரசியுமான பியட்ரிக்ஸ் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர்.

நார்வே, ஸ்வீடன் மற்றும் டென்மார்க் அரச குடும்பங்களைப் போலவே, ஸ்பெயின் அரசர் ஃபெலிப்பே மற்றும் ராணி லடீஸியா ஆகியோரும் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர்.



**அமெரிக்க அதிபர், முன்னாள் அதிபர்கள்**

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தன் மனைவி ஜில் பைடனுடன் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வார் என்பதை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும் அவர்கள் இருவரும் பேருந்தில் பயணம் செய்ய மாட்டார்கள்.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பை அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவின் ஒரு பகுதியாக அதிபர் பைடன் அழைப்பாரா என்ற விவாதம் எழுந்துள்ளது, ஆனால் பிரதிநிதித்துவக் குழுவுக்கான அளவில் சில வரம்புகள் இருப்பதால், முன்னாள் அதிபர்கள் அவசியம் கலந்துகொள்ள முடியாது எனத் தெரிகிறது.



அமெரிக்க முன்னாள் அதிபர்கள் மற்றும் அவர்களின் மனைவிகள் குறிப்பாக, ஒபாமா மற்றும் அவரின் மனைவி இருவருக்கும் தனிப்பட்ட அழைப்புகள் விடுக்கப்பட்டிருக்கலாம் என்ற யூகங்கள் உள்ளன.



அமெரிக்க அதிபராக 1977 முதல் 1981 வரை இருந்த ஜிம்மி கார்ட்டர், இறுதிச்சடங்குக்கான அழைப்பை பெறவில்லை என, அவருடைய அலுவலகம் “பொலிட்டிக்கோ” ஊடகத்திடம் தெரிவித்துள்ளது.

**காமன்வெல்த் தலைவர்கள்**

தன்னுடைய ஆளுகை முழுவதும் ராணி தலைவராக செயல்பட்ட காமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் இறுதிச்சடங்கில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனேசே, நியூஸிலாந்து பிரதமர் ஜெஸிண்டா ஆர்டர்ன் மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

காமன்வெல்த் பிராந்தியத்தில் பிரிட்டன் அரசரை தங்கள் அரச தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளில், அரசரின் பிரதிநிதியாக பணியாற்றும் ஆளுநர் ஜெனரல்கள் தங்கள் நாடுகளின் தலைவர்களுடன் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கதேசத்தை நீண்டகாலமாக ஆட்சி செய்யும் ஷேக் ஹசீனா, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரும் அழைப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா சார்பில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மூ ராணியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க இருக்கிறார். செப்டம்பர் 17-ஆம் திகதி அவர் லண்டன் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பிரதமர் நரேந்திர மோதி பங்கேற்பாரா என்பது பற்றி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.



**மற்ற உலக நாடுகளின் தலைவர்கள்**

அயர்லாந்தின் டீஷா மைக்கேல் மார்டின், ஜெர்மன் அதிபர் ஃப்ராங்க்-வால்டர் ஸ்டெய்மைர், இத்தாலி அதிபர் செர்ஜோ மட்டரேல், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயன் உள்ளிட்ட மற்ற உலக தலைவர்களும் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தென்கொரிய அதிபர் யூன் சுக்-யோல் மற்றும் பிரேசில் அதிபர் சயீர் பொல்சனாரூ ஆகியோரும் தங்கள் வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஜப்பானிய பேரரசர் நருஹிட்டோ, துருக்கி அதிபர் ரிசெப் தாயீப் எர்துவான், பிரான்ஸ் அதிபர் எம்மானுவல் மக்ரோங் ஆகியோரும் இறுதிச்சடங்கில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

கொரோனா தொற்று காலத்திற்கு பிறகு முதன்முறையாக சீனாவுக்கு வெளியே கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானுக்கு இந்த வாரம் பயணம் மேற்கொண்டுள்ள சீன அதிபர் ஷி ஜின்பிங் இறுதிச்சடங்குக்கான அழைப்பை பெற்றாரா அல்லது அழைப்பை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பது குறித்து தெரியவரவில்லை.

தனது அணுசக்தித் திட்டங்களுக்கு நீண்டகாலமாக சர்வதேச தடைகளை எதிர்கொண்டுள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசு, தூதுவர் மட்டத்திலேயே இறுதிச்சடங்கில் பிரதிநிதித்துவம் செய்வார்கள் என, ஒயிட்ஹால் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**அழைப்பு விடுக்கப்படாதவர்கள்**

ரஷ்யா, பெலாரூஸ், மியான்மர் ஆகியவற்றிலிருந்து யாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என, பிபிசியின் ஜேம்ஸ் லேண்டேல் தெரிவிக்கிறார்.

யுக்ரேன் மீதான ரஷ்ய படையெடுப்புக்குப் பின் பிரிட்டன் மற்றும் ரஷ்யாவின் ராஜரீதியிலான உறவுகள் தகர்ந்த நிலையில், “இறுதிச்சடங்கில் பங்கேற்பது குறித்து பரிசீலிக்கவில்லை”



என, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் செய்தித் தொடர்பாளர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

ரஷ்ய படையெடுப்பு பெலாரூஸ் பிரதேசத்தில் இருந்து பகுதியளவு தொடங்கப்பட்டது, பெலாரூஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, புதினின் நெருங்கிய கூட்டாளி.

மியான்மரில் பிப்ரவரி 2021 இல் நடந்த ராணுவ புரட்சிக்குப் பிறகு பிரிட்டன் அதன் ராஜரீக உறவை அந்நாட்டுடன் கணிசமாகக் குறைத்துள்ளது.

## திருக்கோணேஸ்வர ஆலய விவகாரத்தில்

யதீந்திரா

# பின்கதவு ஆக்கிரமிப்பு முயற்சியும், தலைமையற்ற மக்களும்!


இது இந்தக் கட்டுரையாளரின் வழக்கமான அரசியல் பத்திகளிலிருந்து சற்று மாறுபட்டது. ஆனால் இது அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. சில தினங்களுக்கு முன்னர் இந்த விடயங்கள் இந்தக் கட்டுரையாளரின் நேரடி கவனத்திற்கு வந்தது. தட்சன கைலாசம் என்று அழைக்கப்படும் திருகோணேஸ்வர ஆலயமானது, இலங்கையின் பழைமை வாய்ந்த இந்து தமிழ் அடையாளமாகும். திருக்கோணேஸ்வரம் என்பதிலிருந்துதான் திருகோணமலை என்னும் பெயரே உருவாகியது. அதாவது, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மலை என்பதன் பொருள்தான் திருகோணமலை.

திருக்கோணேஸ்வரம் இலங்கையின் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாகும். வடக்கில் நகுலேஸ்வரம். வடமேற்கில் கேதீஸ்வரம், வடகிழக்கில் திருக்கோணேஸ்வரம், மேற்கில் முன்னிஸ்வரம் மற்றும் தெற்கில், தொண்டேஸ்வரம். இதுவே பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அடிப்படையில் வேறு பெயர்களில் இருந்தாலும் கூட, இவை அனைத்தும் சிவலிங்க வழிபாட்டை அடையாளப்படுத்தும் ஆலயங்களாகும். இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான கலாநிதி போல் ஈ. பீரீஸ், 1917 இல், இந்த ஈஸ்வரங்கள் தொடர்பில் குறிப்பிடும் போது, விஜயன் இலங்கைத் தீவிற்கு வருவதற்கு முன்பதாகவே, இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்ட, நிர்வாக முறையொன்று இருந்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஏனெனில் இந்த ஈஸ்வரங்கள் அனைத்துமே இலங்கையின் கரையோர பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றது. இதன் மூலம், இலங்கை முழுவதையும் ஒரு அலகாக ஒருங்கிணைக்கும் வகையிலேயே இவ் ஆலங்களின் அமைவிடம் இருக்கின்றது. இந்த ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்துக்களின் நிர்வாக முறைமையொன்று பலமாக இருந்திருக்கின்றது. பின்னர் மேலைத்தேய படையெடுப்புக்களினால்தான் இந்த நிர்வாக முறைமை சிதைவடைந்தது. இது வரலாறு. இப்போது இன்றைய பிரச்சினையை நோக்குவோம்.

திருகோணமலை இந்துக்களினதும், இலங்கையின் இந்துக்களினதும் அடையாளமாக இருக்கின்ற, திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தையும் உள்ளடக்கியவாறு, சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களம் உல்லாச அபிவிருத்தி என்னும் பெயரில் திட்டமொன்றை முன்னெடுக்க முயற்சிக்கின்றது. இது தொடர்பில் ஆலய நிர்வாக சபையின் அனுமதி பெறப்படவில்லை. திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கான காணியின் அளவு 18 ஏக்கர்களாகும். இந்த எல்லைக்கு வெளியில் தொல்பொருள் திணைக்களம் விடயங்களை முன்னெடுப்பதற்கு நிர்வாக சபை ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால் ஆலய எல்லைக்குள் உல்லாசத் துறை அபிவிருத்தி என்னும் பெயரில் ஆலயத்தின் புனிதத்தை கேள்விக்குள்ளாக்குவதுடன், நீண்டகால நோக்கில், ஆலயத்தின் முழு நிர்வாகத்தையும் தொல்பொருள் மற்றும் உல்லாச அபிவிருத்தி அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஒரு சூழ்ச்சி திரைமறைவில் நடக்கின்றதாக என்னும் சந்தேகம் ஆலய நிர்வாக சபையினர் மத்தியிலுண்டு. எனது பார்வையில் அவர்களது சந்தேகம் மிகவும் நியாயமானது. ஒரு வேளை இவ்வாறு நாம் சந்தேகப்படாமல்இருந்தால்தான் அது தவறானது. ஏனெனில், நமது சந்தேகத்திற்கு வலுவான காரணங்கள் உண்டு.

கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவானதை தொடர்ந்து, சிங்கள-பௌத்த வேலைத்திட்டமொன்றை பகிரங்கமாகவே முன்னெடுத்திருந்தார். இந்த பின்புலத்தில், கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்தும் வாய்ந்த இடங்களை ஆராய்வதற்கென 11 அங்கத்தவர்களை கொண்ட, தொல்பொருள் பாதுகாப்பு செயலணியொன்றை நியமித்திருந்தார். ஏன் கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் இவ்வாறானதொரு செயலணி - இந்தக் கேள்வியை அப்போது பலரும் எழுப்பியிருந்தனர். கோட்டபாயவின் தொல்பொருள் பாதுகாப்பு செயலணிக்கு நியமிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர், எல்லாவல மேதானந்த தேரர். சிங்கள-பௌத்த தொல்பொருளியல் பற்றி பேசிவரும் எல்லாவல, திருக்கோணேஸ்வர ஆலயம் தற்போது அமைந்துள்ள இடத்தில், முன்னர் ஒரு பௌத்த கோவில் இருந்ததாகவும். அதனை இடித்துவிட்டே, கோணேசர் ஆலயத்தை நிறுவியதாகவும் பகிரங்கமாக கூறியவர். இந்த செயலணியின் பிறிதொரு உறுப்பினரான அரிசமலை விகாரையின் தலைமை பிக்குவான பானமறு திலவன்சா தேரர், கன்னியா சிவன் கோவிலை ஆக்கிரமிக்கும் முயற்சியை ஊக்குவித்தவர். இவ்வாறான பின்புலம் கொண்டவர்களை உள்ளடக்கிய கோட்டாவின் செயலணியின் நோக்கம் என்ன என்பதை ஊகிப்பது கடினமல்ல. கோட்டபாய ராஜபக்ச அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து, கோட்டபாயவினால் முன்னெடுக்கப்பட்ட சிங்கள-பௌத்த ஆக்கிரமிப்பு திட்டங்களும் செயலிழந்தன. ஆனால் கோட்டபாயவினால் நியமிக்கப்பட்ட ஆளுனர்தான் இப்போதும் கிழக்கு மாகாண ஆளுனராக இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒரு நாட்டின் தொல்பொருள் திணைக்களத்தின் பிரதான பணியென்பது, அந்த நாட்டின் தொல்பொருள் அடையாளங்களை பேணிப்பாதுகாப்பதாகும். ஆனால் சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களத்தின் பிரதான பணியோ வேறு. அதாவது, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் சிங்கள- பௌத்த அடையாளத்திற்குள் கொண்டுவருவதை மட்டுமே சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களம் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. எங்களுக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில் நோக்கினால், தொல்பொருள் திணைக்களம் ஒரு ஆலய விடயத்திற்குள் தலையிடுகின்றது என்றால், நிச்சயம் அங்கு ஒரு இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தில் நோக்கினால், திருகோணேஸ்வர ஆலயத்தை உள்ளடக்கியவாறு, உல்லாசத்துறை அபிவிருத்தியென்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் கோணேசர் ஆலயத்தை விழுங்கும் ஒரு செயற்பாடுதான். ஏனெனில் உல்லாசத்துறை அபிவிருத்தியை செய்வதற்கு பல்வேறு இடங்கள் இருக்கின்ற போது, குறிப்பாக கோணேசர் ஆலயப் பகுதியை தெரிவுசெய்ய வேண்டிய அவசியமென்ன?



இங்கு பிறிதொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது, பொதுவாக ஆக்கிரமிப்புக்களை திட்டமிடுவதற்கு முன்னர், ஆக்கிரமிப்பிற்கு சாதகமான ஒரு சனக் கூட்டத்தை தயார் செய்துகொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஏற்கனவே ஆலய எல்லைக்குள் வியாபார நிலையங்களை நடத்திவரும் சிங்கள வியாபாரிகள் குழுவொன்று தொல்பொருள் திணைக்களத்தின் நிகழ்சிநிரலுக்கு சாதகமாக இருக்கின்றது. இவர்களை ஆலயத்தின் காணிக்கு வெளியில் செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் கூட, இதுவரையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில், இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் விடயங்களை முன்னெடுக்குமாறே ஆலய நிர்வாக சபை கேட்கின்றது. ஆனால் ஆளுனர் புதிதாக விடயங்களை அணுகப் போவதாக கூறிவருகின்றார். இதன் மூலம் திருகோணேஸ்வரர் ஆலய விடயத்தில் ஆளுனர் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிக்கின்றார் என்பது வெள்ளிடைமலை. ஏனெனில் இது தொடர்பில் ஆலய நிர்வாகம் மற்றும் சிவில் சமூக குழுக்களுடனான சந்திப்பின் போது, விடயங்களை புதிதாக முன்னெடுப்பது பற்றியே ஆளுனர் வாதிட்டிருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில், அவர்களால் முடிந்த அனைத்தையும் ஆலய நிர்வாக சபை முன்னெடுத்திருக்கின்றது. ஆனால் இங்குள்ள பிரதான பிரச்சினை. இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக தலையீடு செய்வதற்கும், இதனை எதிர்ப்பதற்கும் திருகோணமலை தமிழ் மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. சம்பந்தன் என்னும் பெயரில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தாலும் கூட, இதனை கவனிக்கக் கூடிய நிலையில் அவர் இல்லை. திருகோணமலை தமிழரசு கட்சி நிர்வாகம் சம்பந்தன் விடயத்தில் ஒரு இறுதி முடிவையெடுக்க வேண்டும். மக்களா சம்பந்தனா - யார் முக்கியம் என்பதை தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் ஏனைய தமிழ் மாவட்ட தமிழ் மக்கனை வருக்கும் மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர் ஆனால் திருகோணமலை தமிழ் மக்கள் மட்டும் பிரதிநிதியிருந்தும் அரசியல் அனாதைகளாக இருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் பிரதி நிதியான சம்பந்தன், கடந்த இரண்டு வருடங்களாக திருகோணமலைக்கு செல்லவில்லை. சம்பந்தன் இப்போது நாடாளுமன்றத்திற்கும் செல்வதில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதியின் பங்குபற்றல் இல்லாமலேயே திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனைத்து முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. மாகாண சபையும் இல்லாத நிலையில், சிங்கள தரப்புக்கள் தமிழ் மக்களின் இயலாமையை, தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான், கோணேஸ்வரர் ஆலய விவகாரத்தில், எவ்வித இடையூறுகளுமின்றி, தொல்பொருள் திணைக்களத்தால் செயற்பட முடிகின்றது. தங்களை, ஆலய நிர்வாக சபையினால் தடுக்க முடியாதென்னும் நிலைப்பாட்டிலிருந்துதான் தொல்பொருள் திணைக்களம் எதேச்சாதிகாரமாக இந்த விடயங்களை முன்னெடுக்கின்றது.

இதுவரையில் ஆலய நிர்வாக சபைக்கு, தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்படவில்லை. அதேவேளை, அவர்களது ஆலோசனைகளையும் கோரவில்லை. 1971 மற்றும் 1981 வர்த்தமானியின்படி, தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் தாங்கள் எதனையும் செய்ய முடியுமென்னும் அதிகாரத்திலிருந்தே தொல்பொருள் திணைக்கள அதிகாரி பேசியிருக்கின்றார். ஆனால் குறித்த வர்த்தமானி அறிவித்தலானது, நாடு யுத்தத்திற்குள் சிக்கியிருந்த போது வெளியிடப்பட்டவை. இது யுத்ததிற்கு பின்னரான பொறுப்புக் கூறல் தொடர்பில் பேசப்படும் காலம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் உடனடி கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற, இவ்வாறானதொரு காலத்தில் கூட, தமிழ் மக்களின் வரலாற்று பெருமை மிக்க ஆலயமாகவும், இந்துக்களின் அடையாளமாகவும் இருக்கின்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனிதத் தன்மையை கேலிக்குள்ளாக்கும், இவ்வாறானதொரு திட்டத்தை தொல்பொருள் திணைக்களமும் ஆளுனரும் முன்னெக்க முற்படுவதை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

சர்வதேச அழுத்தங்கள் எதனையும் நாம் கண்டுகொள்ளப் போவதில்லை என்னும் துனிவிலுருந்துதான் இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

# புலமைச் சிகரம்



## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | **பொருத்தமான வாக்கியங்கள்** | | | | |

கல்வி tv CHANNEL-1

**16.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**16.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ரணிலின் அரசில் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காது!

## ஜெனிவா கவனஈர்ப்பு போராட்டத்தில் மட்டு மேயர் சரவணபவன்




ஜெனிவா,செப்.16

"மொட்டு கட்சியின் பின்னால் இருக்கும் ரணிலின் அரசாங் கம் தமிழ் மக்களுக்கான நியாயமான நீதியான நிரந்தரமான தீர்வை தரும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. இதனை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும்."

- இவ்வாறு ஜெனிவா கவன ஈர்ப்புப் போராட்டத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

அனைத்து உலக மனித உரிமை ஸ்தாபனம் மற்றும் இனப் படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள் கூட்டமைப்பு இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடக்கும் மண்டபத்துக்கு முன்பாக முருகதாஸ் தலைமையிலே கடந்த செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது .

அந்தப் போராட்டத்தில் இலங்கையில் இருந்து சென்ற பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

அங்கு மேயர் சரவணபவன் மேலும் உரையாற்றுகையில்-

இலங்கையில் கடந்த காலங்களில் தமிழர்களின் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான இன அழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இது விடயத்தில் காலம் தாழ்த்தாமல் குறுகிய கால இடைவெளிக்குள் இதற்கு தீர்வு தரவேண்டும். திட்டமிட்ட இனப்படுகொலைக்கு நியாயமான தீர்வு வேண்டும் .இதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடு சபையில் உள்ள அனைத்து நாடுகளும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

2009இல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். இதுவரைக்கும் அதற்கு நீதி இல்லை. அதற்கு நீதி வேண்டும் என்று தங்களது பிள்ளைகளை திருப்பித் தரவேண்டும் என்று வடபுலத்திலே தாய்மார்கள் 2000 நாட்களாக போராடி வருகிறார்கள். இதுவரைக்கும் எந்த தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. சிங்கள பேரினவாதம் எமக்கு தீர்வு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சர்வதேசம் ஒன்று தான் எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும்.

உலகில் தமிழர் தேசத்தை நியாயமான தேசமாக மிளிரச் செய்ய வேண்டும். நீதிக்கான வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபடுவோம்-என்றார். (அ)

# குரங்குத் தொல்லையால் விவசாயிகளுக்கு பாதிப்பு

அம்பாறை, செப். 16

அம்பாறை மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லை காரணமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் பலவிதமான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக நாவிதன்வெளி, சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு காடுகளில் இருந்து கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகள் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் பழமரங்களுக்கு பலத்த சேதத்தை விளைவிப்பதுடன் வீடுகளுக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகளும் உடைந்து சேதத்திற்குள்ளாகின்றன.

குடியிருப்புகளுக்குள் கூட்டமாக வரும் குரங்குகள் வீடுகளுக்குள் நுழைந்து சமயலறையிலுள்ள உணவுப் பொருட்களை உண்டு நாசப்படுத்துகின்றன.

கிராமங்களில் பயிர்செய்யப்பட்டுள்ள கொய்யா, வாழை, மா போன்ற பழ மரங்களின் பிஞ்சுகளை கடித்து சேதப்படுத்துவதால் விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளை தொடர முடியாதுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு அணில்களையும் குரங்குகளையும் அருகிலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து சன நடமாட்டம் இல்லாத வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (அ)

# மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முன் போராட்டம்




கல்முனை,செப். 16

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயம் முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் பதாகைகளுடன் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை போரம் மற்றும் திருகோணமலையில் உள்ள மனிதாபிமான வள நிலையம் ஆகிய அலுவலகங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள ஆவணங்கள் திருடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மனித உரிமை ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயத்தில் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு சதுரங்கப் பயிற்சி முகாம்

திருமலை, செப். 16

திருகோணமலைக் கல்வி வலயத்தின் கீழ் சதுரங்க விளையாட்டுப் போட்டியினை வலுப்படுத்தும் நோக்கில் பயிற்சி முகாமானது திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 08 மணி முதல் மாலை 04 மணி வரை இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் பட்டறைக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திஸ்ஸநாயக பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முதல் நாள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (அ)



# பேரினவாதச் செயற்பாட்டினால் தென்தமிழீழம் சுருங்கி வருகிறது!

## ஜெனிவா கவன ஈர்ப்பு போராட்டத்தில் கல்முனை கணேஷ்

ஜெனிவா, செப். 16

1948 டிசம்பர் 09 இல் உருவான ஐ.நா சபையின் 260 ஆவது இலக்க தீர்மானத்தின்படி இனப்படுகொலையானது ஒரு பன்னாட்டு குற்றமாகும். ஆனால் இதனை தொடர்ச்சியாக இலங்கை பேரினவாதம் முன்னெடுத்து வருகின்றது. இதனால் தென் தமிழீழம் சுருங்கி வருகின்றது. தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும்.

-இவ்வாறு ஜெனிவா கவன ஈர்ப்புப் போராட்டத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய மாணவ மீட்புத் தலைவரும் கல்முனை மனித உரிமை சமூக செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் தெரிவித்தார்.




அங்கு மனித செயற்பாட்டாளர் கணேஷ் மேலும் உரையாற்றுகையில்-

இலங்கையில் கடந்த 60க்கும் மேற்பட்ட வருடங்களாக இந்த இன அழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றது 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது ஆனால் 1950 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாதம் இந்த சிங்கள ஆக்கிரமிப்பை தென்தமிழீழத்தில் முதலாவதாக மேற்கொண்டது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலேயே குடியேற்ற திட்டத்தை ஆரம்பத்தில் மேற்கொண்டது.

அங்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் காணிகள் சூறையாடப்பட்டது. புதிதாக ஐம்பது குடியேற்ற கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக சிறுபான்மைக்கு எதிராக அந்த நடவடிக்கை முதல் முதலிலேயே அரங்கேறியது.

எமது தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒரே நோக்கம் எமக்காக ஒரு தேசம் சுய நிர்ணய ஆட்சி என்பதாகும். அதற்காக நாம் ஒற்றுமையாக கல்வியறிவால் இணைந்து போராட வேண்டி இருக்கின்றது. உலகில் தமிழர் தேசத்தை நியாயமான தேசமாக மிளிரச் செய்ய வேண்டும். நீதிக்கான வழிமுறையை ஏற்படுத்தவேண்டும். அதற்காக நாம் ஒன்றுபடுவோம்-என்றார். (அ)

# 2ஆம் எலிசபெத் மகாராணியின் பிரமாண்டமான மரணச் சடங்கு!

- தலைவர்கள் உட்பட உலகப் பிரமுகர்கள் 500 பேர் லண்டனுக்கு!!
- தனிப்பட்ட விமானங்கள், ஹெலிகளில் வரத் தடை!!
- வாகன அணிகள் இல்லை
- தலைவர்களுக்கு பஸ் வசதி!
- லண்டன் பயண முன்பதிவு அதிகரிப்பு! கட்டணம் உயர்வு!!
- உக்ரைன் அதிபர் வரக்கூடும்
- புடின் கலந்துகொள்ளமாட்டார்!

*லண்டன், செப். 16*

”இறுதிச் சடங்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் இடவசதிகுறைவாக இருப்பதால், வெளிநாட்டு அரசுத் தலைவர்களின் குடும்பத்தினர், பணியாளர்கள் அல்லது பரிவாரங்களைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். இதற்காக வருந்துகிறோம்.”

-இவ்வாறு கேட்டுக் கொள்ளும் செய்தி ஒன்று உலகெங்கும் உள்ள பிரிட்டிஷ் தூதரகங்களூடாக வெளிநாடுகளுக்கு விடுக்கப்பட்டிருக்கிறது.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள எலிசபெத் மகாராணியின் இறுதி நிகழ்வு கடந்த பல தசாப் தங்களுக்குப் பின்னர் பிரிட்டனில் நிகழவிருக்கின்ற

பிரமாண்டமான மரணச் சடங்கு என்று வர்ணிக்கப்படுகிறது. 57 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சேர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் இறுதிச் சடங்குகளுக்குப் பின்னர், பாதுகாப்பு, இடவசதி, போக்குவரத்து மற்றும் ராஜதந்திர நெறிமுறைகளில் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்கின்ற முதலாவது அரசு மரியாதைகளுடனான இறுதிச் சடங்கு இதுவாகும் என்று குறிப்பிடப்படுகிறது.

முக்கிய வல்லரசுகளினதும் பிரித்தானியக் குடியேற்ற (காலனி) நாடுகளினதும் அரசுத் தலைவர்கள், பிரதமர்கள், மற்றும் முடியாட்சி செல்வாக்குள்ள நாடுகளது மன்னர்கள், இளவரசர்கள், ராணிகள் உட்பட அரச குடும்பத்தவர்கள் என்று சுமார் 500 அதிவிசேட பிரதிநிதிகள் லண்டனுக்கு வரவிருக்கின்றனர்.

ஜோ பைடன், மக்ரோன், கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ, நியூசிலாந்து பிரதமர் ஜெசின்தா ஆர்டெர்ன் ஸ்பெயின் அரசர் ஃபெலிப், ஜப்பானியப் பேரரசர் நருஹிட்டோ, அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பனெஸ், ஜேர்மனிய அதிபர் ஃபிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியர் ஆகியோரது வருகை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குடியேற்ற நாடுகளில் இருந்து பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹஸீனா இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் வருகின்றனர். இந்தியப் பிரதமர், சீன அதிபர் ஆகியோர் வருகை தருவார்களா என்பதை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயின் இரண்டாயிரம் ஆசனங்களும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் உட்பட அரசுத் தலைவர்கள் ஒவ்வொருவ ருக்கும் ஒதுக்கப்படவுள்ளன. ஒரு நாட்டுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆசனங்கள் மட்டுமே பங்கிடப்படும். அரசுத் தலைவர்கள் அவர்களது ஒரு சகா அல்லது துணைவி, துணைவர் என இரண்டு பேருக்கே இடம் கிடைக்கும். பெரும் ஆளணி இன்றி வருகை தருமாறு அமெரிக்க அதிபர் பைடனிடம் அரச குடும்பத்தின் சார்பில் கோரப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

லண்டன் விமான நிலையங்களில் ஏற்படக் கூடிய பெரும் நெருக்கடிகளைக் கவனத்தில் கொண்டு தனிப்பட்ட ஜெற் விமானங்கள், ஹெலிக்கொப்ரர்களில் வருகை தருவதைத் தவிர்த்து வழக்கமான வர்த்தக சேவை விமானங்களில் வருமாறு அரசுத் தலைவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் தங்கள் தங்கள் சொந்த வாகனங்களில் அணியாக இறுதி நிகழ்வு நடைபெறும் பகுதிக்குள் செல்ல முடியாது. அவர்களது வாகனங்கள் மேற்கு லண்டனில் நிறுத்தப்படும். அவர்கள் அனைவரும் வரவேற்பு மண்டபம் ஒன்றில் இருந்து பஸ்கள் மூலம் வெஸ்ட்மின்ஸ்டர் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அமெரிக்க அதிபரும் அவரது சொந்த வாகன அணியைத் தவிர்த்து ஏனைய தலைவர்களுடன் ஒன்றாக பஸ் மூலமே பயணிக்க வேண்டியிருக்கும் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

ஒட்டுமொத்த உலகத் தலைவர்களும் இறுதி நிகழ்வுக்கு வருகைதருகின்ற போதிலும் ரஷ்யா அதிபர்



விளாடிமிர் புடின் கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. ரஷ்ய அதிபரையோ அல்லது நாட்டின் சார்பில் பிரதிநிதிகள் எவரையுமோ அழைப்பதில்லை என்று பிரித்தானிய அரசு முடிவு செய்துள்ளது. உக்ரைன் அதிபர் ஷெலான்ஸ்கி இறுதிச் சடங்கில் எதிர்பாராத விதமாகத் திடீரென வந்து கலந்துகொள்ளக் கூடும் என்று எதிரபார்க்கப்படுகிறது. பெலாரஸ், மியன்மார் நாடுகளுக்கும் அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை.

இதேவேளை, மகாராணிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பிரான்ஸிலும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் லண்டன் செல்வதற்குப் ஆயத்தமாகி வருவதால் வார இறுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரயில், பஸ், விமானப் பயணப் பதிவுகள் திடீரென அதிகரிததுள்ளன. கட்டணங்களும் உயர்ந்துள்ளன. லண்டனுக்கான எயார் பிரான்ஸின் விமானக் கட்டணம் 600 ஈரோக்கள் வரை அதிகரித்துள்ளது. (அ)



# வாகன விபத்தில் காயம் இன்றி தப்பினார் உக்ரைன் ஜனாதிபதி!

## அவரது வாகன அணி மீது கார் மோதியதாகத் தகவல்

*கீவ், செப். 16*

உக்ரைன் நாட்டின் அதிபர் ஷெலென்ஸ்கி பயணம் செய்த வாகன அணி மீது கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

புதன் இரவுப் பொழுதில் தலைநகர் கீவ்வில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. அதிபர் காயம் எதுவும் இன்றித் தப்பி விட்டார் என்று அவரது பேச்சாளர் செர்ஜி நைகிஃபோரோவ் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார். மோதிய காரின் சாரதி காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதிபர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.அவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்து எவ்வாறான சூழ்நிலையில் நிகழ்ந்தது என்று அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாட்டின் வட கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த கார்கீவ் பிராந்தியத்தில் ரஷ்யப்படைகளுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பெரும் எதிர்த் தாக்குதல் ஒன்றை நடத்திய உக்ரைன் படைகள் பெரியளவு நிலப் பிரதேசத்தை மீட்டுள்ளன. ரஷ்யா தனது படைகளை அங்கிருந்து திருப்பி அழைத்துவருகிறது. தாக்குதலில் கைப்பற்றப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக அதிபர் ஷெலென்ஸ்கி நேற்று அங்கு விஜயம் செய்திருந்தார். அங்கிருந்து திரும்பிய வழியிலேயே அவரது வாகன அணி மீது கார் மோதிய சம்பவம் இடம்பெற்றிருக்கிறது என்று சில தகவல்கள் தெரிவித்தன. விபத்து நடந்த பின்னர் அதிபரின் வழக்கமான நாளாந்த உரையை ரெலிகிராம் ஊடகம் வெளியிட்டது.

இதேவேளை, உக்ரைனில் நீர்த்தேக்கம் ஒன்றின் அணைக்கட்டு ரஷ்யப் படைகளின் தாக்குதலில் சேதமடைந்ததை அடுத்து சில இடங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டில் இருந்து பெருமளவு நீர் பாய்ந்து வெளியேறுவதால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுவருகின்றனர்.

நீர்த் தேக்கம் மீதான தாக்குதலைக் கண்டித்துள்ள அதிபர் ஷெலென்ஸ்கி போரில் தோல்வியைச் சந்தித்துள்ள ரஷ்யப் பயங்கரவாத ஆட்சி பொதுமக்கள் இலக்கு மீது நடத்திய ஒரு கீழ்த்தரமான தாக்குதல் என்று அதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# முன்னணிப் போர் முனைகளுக்கு உக்ரைன் ஜனாதிபதி திடீர் விஜயம்

*கீவ், செப். 16*

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்ட பகுதிகளுக்கு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று முன் தினம் திடீர் விஜயம் செய்து முன்னணி களமுனைகளில் தனது படைகளைச் சந்தித்து அவர்களுக்கு உற்சாகமூட்டினார்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரில் உக்ரைன் நிச்சயம் வெற்றி பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் கார்கிவ் பகுதி உட்பட ரஷ்யா ஆக்கிரமித்த பல பகுதிகளை உக்ரைன் படைகள் மீளக் கைப்பற்றி முன்னேறி வருகின்றன. உக்ரைன் படைகளின் திடீர் உத்வேக தாக்குதல்களால் ரஷ்யப் படைகள் அதிர்ச்சியூட்டும் தலைகீழ் மாற்றத்தை சந்தித்தன.

இந்நிலையில் மீட்கப்பட்ட மிக முக்கிய இராணுவத் தளமாகக் கருதப்படும் இலியம் நகருக்கு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று திடீர் விஜயம் செய்தார். 4 நாட்களுக்கு முன்னர் வரை ரஷ்யாவின் முக்கிய கோட்டை மற்றும் பிராந்தி




யத்தில் ஆயுத-தளபாட மையமாக இருந்த எரிந்த நகர சபை கட்டடத்தின் முன் உக்ரேனிய கொடி உயர்த்தப்பட்டிருந்ததை அவர் பார்வையிட்டார்.

ரஷ்யா ஆக்கிரமித்த இலியம் நகரில் இப்போது எங்கள் நீல-மஞ்சள் கொடி பறக்கிறது. இந்தக் கொடி ஒவ்வொரு உக்ரேனிய நகரத்திலும் கிராமத்திலும் பறக்கும் என இந்த விஜயத்துக்குப் பின்னர் நேற்று முன் தினம் இரவு வீடியோ உரையில் ஜெலென்ஸ்கி கூறினார். (அ)



## இலங்கை அணியுடன் இணைகிறார் மஹேல

கொழும்பு, செப். 16

இலங்கை கிரிக்கெட் அணியுடன் மஹேல ஜெயவர்த்தன இணைந்து கொள்ளவுள்ளார் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், ஐ. சி. சி. இருபது - 20 உலகக் கிண்ண தொடரில் இலங்கை அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக மஹேல ஜெயவர்த்தன இணைந்து கொள்ளவுள்ளார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐ. சி. சி. இருபதுக்கு - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகக் கிண்ண இருபது - 20 பங்களாதேஷ் அணி தயார்!

டாக்கா, செப். 16

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 16 முதல் நவம்பர் 13 வரை 2022 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியின் பிரதான சுற்றுக்கு அவுஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய 8 நாடுகளும் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

மீதமுள்ள 4 அணிகள் முதல் சுற்றில் போட்டியிட்டு அதன் வழியாக பிரதான சுற்றுக்குத் தெரிவாகவுள்ளன.

இந்நிலையில் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசியக் கோப்பைப் போட்டியில் விளையாடிய மூத்த வீரர் மஹ்முதுல்லா அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.



லிடன் தாஸ், யாசிர் அலி, நுருல் ஹசன், ஹசன் மஹ்முத், நஜ்முல் ஹசைன் சாண்டோ ஆகியோர் அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ளார்கள்.

ஆசியக் கிண்ணப் போட்டியில் விளையாடிய பர்வேஸ் ஹூசைன், அனாமுல் ஹக், மெஹதி ஹசன், முகமது நயீம் போன்றோரும் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

அணி விவரம்: ஷகீப் அல் ஹசன் (அணித் தலைவர்), சபீர் ரஹ்மான், மெஹிதி ஹசன் மிராஸ், அபிவ் ஹூசைன், மொசாடெக் ஹூசைன், லிடன் தாஸ், யாசிர் அலி, நுருல் ஹசன், முஸ்தாபிசுர் ரஹ்மான், முகமது சைபுதீன், டஸ்கின் அஹமது, எபடாட் ஹூசைன், ஹசன் மஹ்முத், நசும் அஹமது, நஜ்முல் ஹூசைன் சாண்டோ.



## ஐ. சி. சி. தரவரிசை; ஹசரங்க முன்னேற்றம்!

டுபாய், செப். 16

சர்வதேச கிரிக்கெட் சபை இருபது - 20 போட்டியின் தரவரிசையில் வனிந்து ஹசரங்க சகலதுறை வீரருக்கான பட்டியலில் 4ஆம் இடத்தையும், பந்துவீச்சாளர் பட்டியலில் 6ஆம் இடத்தையும் பிடித்துள்ளார்.

இது இவரின் மிகச்சிறந்த முன்னேற்றமாக அமைந்ததுடன், முதன்முறையாக முதல் 5 இடங்களுக்குள்ளும் இடம்பெற்றுள்ளார்.

வனிந்து ஹசரங்க சகலதுறை வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் 4 இடங்கள் முனனேறி 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இதேசமயம், ஓர் இடம் முன்னேறி பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்தார்.

இதேவேளை துடுப்பாட்டத் தரவரிசையில், 7ஆவது இடத்திலிருந்த பதும் நிஷங்க ஓர் இடம் கீழிறங்கி 8ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார். தவிர, பானுக ராஜபக்ஷ 33 இடங்கள் முன்னேறி 34ஆவது இடத்தையும் தசுன் சானக ஓரிடம் பின்தங்கி 40ஆவது இடத்திலுள்ளார்.

பந்துவீச்சாளருக்கான தரவரிசையில், மஹீஷ் தீக்ஷன 8ஆவது இடத்தில் மாற்றமின்றி தொடர்கிறார். சாமீக கருணாரத்ன 4 இடங்கள் முன்னேறி 42ஆவது இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காற்றில் எம்பியபடியே கோல் அடித்த ஹேலண்ட்

பார்சிலோனா, செப். 16

நடப்பு சம்பியன்ஸ் லீக் தொடரில் காற்றில் எம்பியபடியே பந்தை கோல் கம்பத்துக்குள் தள்ளி பிரமிக்க வைத்துள்ளார் 22 வயதான உதைபந்தாட்ட வீரர் எர்லிங் ஹோலண்ட்.

இவர் நடப்பு தொடரில் மன்செஸ்டர் சிற்றி அணிக்காக விளையாடி வருகிறார். அவரது அபார கோல் பருஷியா டார்ட்மண்ட் அணிக்கு எதிரான போட்டியில் மன்செஸ்டர் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற செய்துள்ளது.

மன்செஸ்டர் நகரில் உள்ள எதிஹாட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இரு அணிகளும் குறூப் 'ஜி'இல் இடம்பெற்றுள்ளன. இந்தப் போட்டி தொடங்கியது முதல் சுமார் 80 நிமிடங்கள் வரை டார்ட்மண்ட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆனால், கடைசி 10 நிமிடங்களில் இலாவகமாக கோல் பதிவு செய்து ஆட்டத்தையும் வென்றது மன்செஸ்டர் சிற்றி.

இதில் பந்தை மறித்து அதை அப்படியே காற்றில் எம்பி தனது பின்பக்க குதிக்கால் மூலம் பந்தை தட்டி கோலாக மாற்றி இருந்தார் ஹோலண்ட்.

நடப்பு தொடரில் ஹோலண்ட் கோல் மழை பொழிந்து வருகிறார். இதுவரையில் அவர் விளையாடி உள்ள 21 சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் 26 கோல்களை பதிவு செய்துள்ளார். சராசரியாக 62 நிமிடங்களுக்கு ஒருமுறை அவர் கோல் பதிவு செய்து வருகிறார். (ஐ)





## மேற்கிந்திய அணி அறிப்பு முக்கிய வீரர்கள் இல்லை!

பார்படோஸ், செப். 16

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான மேற்கிந்தித் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பிரபல இருபது - 20 வீரர்களான ரஸல், சுனில் நரைன் ஆகியோருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகிறது. இதற்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் இருபது - 20 போட்டியின் பிரபலங்களான அன்ட்ரூ ரஸல், சுனில் நரைன் ஆகியோர் இல்லாத அணியை மேற்கிந்தியா அறிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இலங்கை அணி போன்று தகுதி சுற்றில் விளையாடியே பிரதான சுற்றுப் போட்டிக்குள் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம்: நிகோலஸ் பூரண் (அணித் தலைவர்), ரோவ்மன் பவல், யானிக் கரியா, ஜோன்சன் சார்ள்ஸ், ஷெல்டன் காட்ரெல், ஹெட்மையர், ஜசன் ஹோல்டர், அகேல் ஹூசைன், அல்ஸாரி ஜோசப், பிராண்டன் கிங், எவின் லூயிஸ், கைல் மேயர்ஸ், ஒபட் மெகாய், ரேமன் ரீபர், ஒடியன் ஸ்மித்.

# பாதை சீரின்மையினால் பாடசாலை பஸ் நிறுத்தம்!

## மாணவர் முதல் மக்கள்

அம்பாறை, செப். 16

திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட பின்தங்கிய தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை குன்றும்குழியுமாக இருப்பதால் அங்கு சேவையிலீடுபட்ட ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பஸ் டிப்போவால் திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பஸ் சேவை தினமும் இரண்டு தடவைகள் இடம்பெற்று வந்தன.

இவ்வேளையில் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான பாதையில் தாண்டியடி சந்தியிலிருந்து தங்கவேலாயுதபுரம் செல்வதற்கான 12 கிலோமீற்றர் தூர ஒரேயொரு பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

மண் ஏற்றும் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக இப்பாதையை பயன்படுத்தியதன் காரணமாக இப் பாதை இவ்வாறு படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கலாமென கூறப்படுகிறது.

இதனால் இருந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டு இருக்கின்றது .

இதனால், மாணவர்களும் விவசாயிகளும் பொதுமக்களும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் இந்த பன்னிரண்டு கிலோமீற்றர் தூரத்தை கால்நடையில் நடந்தே பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களம் இந்த பாதையை செப்பனிட பத்தாயிரம் கிலோமீட்டர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கேள்வி அறிவித்தல் போடப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக அது கைவிடப்பட்டது.

இப் பிரதேசத்தில் 12000 ஏக்கர் வயல் காணிகளும் இருக்கின்றன. அவற்றுக்கு செல்கின்ற விவசாயிகள் மக்கள் கால்நடையாக செல்ல வேண்டியிருக்கின்றது.

இந்த அவல நிலையை கருத்தில் கொண்டு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்று இந்த வீதியை செப்பனிட நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகின்றது.

தங்கவேலாயுதபுரம் பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக இருப்பதாக திருக்கோயில் வலய கல்வி பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

தங்கவேலாயுதபுரம் கஞ்சிகுடிச்சாறு செல்லுகின்ற மக்களும் கால்நடையாக செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. விரைவில் இதற்கான தீர்வு கொடுக்கப்படும் என்று திருக் கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தெரிவித்தார். (அ)

# சித்திர அறை திறந்து வைப்பு

அம்பாறை, செப். 16

சம்மாந்துறை வலயத்தின் பாடசாலை மட்ட முதலாவது சித்திர அறை நேற்று வியாழக்கிழமை சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.



மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்விப்பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் யசிர் அரபாத், உதவி கல்விப் பணிப்பாளர்களான நசீர் இஜாபிர் இநைரூஸ் கான் , சகாதேவ ராஜா ஆகியோர் கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்கள்.

சித்திர பாடத்திற்கான வலய இணைப்பாளர் முனாப் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் சித்திர ஆசிரியர் ரி. வாமதேவனின் ஏற்பாட்டில் இந்த முதலாவது சித்திர அறை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நியூஸிலாந்துக்குச் சென்று இலங்கையர்கள் வாழலாம்

## தூதரக அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ் அழைப்பு

மட்டக்களப்பு,செப்.16

**நியூஸிலாந்தில் இலங்கையர்கள் வந்து வாழலாம் என்றும் அங்கு ஏற்கெனவே 20 ஆயிரம் இலங்கையர்கள் வாழ்கின்றார்கள் எனவும் கொழும்பிலுள்ள நியூஸிலாந்து தூதரகத்தின் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வுக்கான அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ் தெரிவித்தார்.**




நியூஸிலாந்து தூதரகத்தின் நிதியளிப்பில் ஸ்தாபிக்கப்பட்ட, காத்தான்குடி பெண்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த உளநல ஆற்றுப்படுத்தல் நிலையமும் சுய கற்றல் மையமும் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில், அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேறு நூற்றுக்கணக்கான திட்ட முன்மொழிவுகள் நியூஸிலாந்து தூதரகத்துக்கு சமர்ப்பிக் கப்பட்டிருந்தபோதும், நிதியுதவி அளிப்பதற்கு நியூஸிலாந்து தூதுவர், காத்தான்குடியில் பெண்களுக்கான இந்த உள நல ஆற்றுப் படுத்தல் மற்றும் சுய கற்றலுக்கான திட்டத்தைத் தெரிவு செய்தார்.

5 மில்லியன் மாத்திரமே சனத்தொகையைக் கொண்ட நியூஸிலாந்து நாடு இலங்கையைப் போல் இரு மடங்கு பரப்பளவைக் கொண்டது. அங்கு இலங்கையர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.

இங்கே அமர்ந்திருக்கக்கூடிய இன்றைய நிகழ்வில் பங்கு கொண்ட சிறுமிகள், இளம் பெண்கள், நியூஸிலாந்துக்கு வருவதை நான் ஊக்குவிக்கின்றேன். எதிர்காலத்தில் ஒரு சிலரை நியூலாந்தில் காண முடியும் என நம்புகின்றேன்.

நான் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு இங்கு இலங்கையிலிருந்து பணியாற்றுவேன். அந்த வேளையில் நான் மீண்டும் கிழக்குக்கு வந்து உங்களை சந்திப்பேன். இந்தத் திட்டம் வெற்றியளித்து உங்கள் வாழ்வு மேம்பட வேண்டுமென நான் அவாவுறுகின்றேன்- என்றார். (அ)

# அஷ்ரப் நினைவேந்தல் இன்று

நிந்தவூர்,செப். 16

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 22 ஆவது வருட நினைவுதின நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக நாட்டின் முஸ்லிம் பிரதேசங்களில் அன்னாரது நினைவேந்தல் நிகழ்வுகள் பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதேச, மாவட்ட மட்டக்கிளைகள் உட்பட அஷ்ரபை நேசிக்கும் பல்வேறு முஸ்லிம் அமைப்புக்களும் நினைவேந்தல் நிகழ்வுகளை இன்று நடத்தவுள்ளன.

இதன்படி மர்ஹூம் அஷ்ரபின் ஆத்ம ஈடேற்றத்திற்காக விசேட கத்தமுல் குர்ஆன், மற்றும் விசேட துஆ பிரார்த்தனை, மரம் நடுகைஇ அன்னதானம் வழங்கல் முதலான நினைவேந்தல் நிகழ்வுகள் முஸ்லிம் பிரதேசங்களில் பரவலாக இடம்பெறவுள்ளன.

இதேவேளை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஜினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மர்ஹூம் அஷ்ரப்பின் 22 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு இன்று மாலை அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-06)

# உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, செப். 16

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

கிரான்குளம் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை வேலைக்கு சென்ற நபர் வீட்டுக்கு திரும்பாத நிலையில், நேற்று முன்தினம் காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# ஓய்வூதியர் கொடுப்பனவு இழுத்தடிப்பு; வழக்கு ஒக்ரோபர் 25 வரை ஒத்திவைப்பு

நிந்தவூர், செப். 16

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்காமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலான பதில் மனுவை இனியும் தாமதியாமல் தாக்கல் செய்யுமாறு மேன்முறையீடு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு மேன்முறையீடு நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதியரசர்கள் இவ்வாறு உத்தரவிட்டு, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளனர் என ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உப தலைவர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இவ்வழக்கு தொடர்பில் 18 தவணைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அரச தரப்பினர் இதுவரை வழக்கிற்கான பதில் மனுவைத் தாக்கல் செய்யவில்லை எனவும் இந்த வழக்கை தொடர்ந்தும் நீடித்துச் செல்ல முடியாது எனவும் வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் எனவும் இதன்போது நீதியரசர்கள் அரச தரப்பு சட்டத்தரணியை அறிவுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 25.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் இல்லாவிட்டால் பதில் மனுவை கருத்தில் கொள்ளாமல் விசாரணைகளை ஆரம்பித்து, தீர்ப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் நீதியரசர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்கு தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் இதுவரை 2000 ஓய்வூதியர்கள் பல்வேறு காரணங்களால் மரணமாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-06)

## நல்லூரில்...

ஏற்படுத்தி வந்தனர். இம்முறை பாதுகாப்புத் தரப்பினர் இடையூறை ஏற்படுத்தாதபோதும், தமிழர் தரப்புக்கள் தமக்குள் மோதி நினைவு நிகழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தின.

தியாகி திலீபன் நினைவு நேற்று ஆரம்பித்த நிலையில், இதன் ஏற்பாட்டை யார் செய்வது என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், மணிவண்ணன் அணிக்குமிடையில் கடந்த 2 நாட்களாக முறுகல் நீடித்து வந்தது.

ஒரே இடத்தில் இரண்டு தரப்புக்களும் வெவ்வேறு அஞ்சலி நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன.

மணிவண்ணன் தரப்பு திலீபன் தூபியை சுத்தம் செய்து, அருகில் உருவப்படம் வைத்தபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அதற்கு முன்பாக பந்தல் அமைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் இரு தரப்பையும் சமரசம் செய்யும் பேச்சுக்கள் நடந்தன. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பசீர் காக்கா உள்ளிட்டவர்கள் இரு தரப்புடனும் பேசி, பொதுவான நினைவு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தனர்.

எனினும், இரு தரப்புக்குள்ளும் குழப்பம் நீடித்தது.

தியாகி திலீபனின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்ய மணிவண்ணன் தரப்பு ஏற்பாடு செய்திருந்தது. எனினும், உருவப்படம் திரைநீக்கம் தேவையற்றது என இரவோடு இரவாக முன்னணியினர் அந்த ஏற்பாடுகளை அகற்றி விட்டனர்.

அத்துடன், மணிவண்ணன் தரப்பினர் வைத்த படத்திற்கு முன்பாக கொடி நாட்டினர்.

நேற்று நிகழ்வு ஆரம்பிக்கும் தருணத்தில், அந்த கொடிகளை அகற்றும்படி பல்வேறு தரப்பினரும் அழுத்தம் கொடுத்த பின்னர், முன்னணியினர் அதை அகற்றினர்.

நேற்றைய நிகழ்வை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தொகுத்து வழங்கினார்.

அவர் வழக்கம் போல, ஒட்டுக் குழுக்கள், துரோகிகள், 13ஆவது திருத்தத்தை ஆதரிப்பவர்கள் பற்றி பேசினார்.

அப்போது, பசீர் காக்கா சென்று, நினைவஞ்சலியை குழப்பும் விதமாக பேசவேண்டாம், அரசியல் மேடையல்ல இது, அரசியல் பேசுவதெனில் தனியாக மேடையமைத்து பேசுங்கள் என்றார்.

இதையடுத்து, முன்னணியினர் பசீர் காக்காவுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். நினைவு நிகழ்வை குழப்புகின்றார்கள் என கண்ணீர் விட்டபடி பசீர் காக்கா அங்கிருந்து ஒதுங்கி வந்தார்.

மீண்டும் சுகாஷ் மைக் பிடித்து, தனது பழைய கருத்துக்களை வலியுறுத்தினார்.

பசீர் காக்கா மீண்டும் சென்று அதை தவிர்க்குமாறு கேட்டார். மீண்டும் தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் பசீர் காக்கா ஒதுங்கிச் சென்று விட்டார்.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட ஒருவர் முன்னணியினரை கண்டித்த போது, அவரை ஈ.பி.டி.பி என, முன்னணியினர் சத்தமிட்டனர். அவர் கோபமடைந்து, இதேயிடத்தில் 12 நாட்களும் தான் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும், முன்னணியினர் யாராவது தயாரா எனச் சவால் விடுத்தார்.

அங்கிருந்தவர்கள் அவரை சமரசம் செய்தனர். (அ-03)

## இலங்கைக்கு...

களுடன் ஒப்பிடுகையில் தற்போது மீட்சி அடைந்துள்ளது.

இந்நிலையில், “ரொய்ட்டர்ஸ்” சர்வதேச செய்தி சேவைக்கு கருத்து தெரிவித்த இந்திய அரச தரப்பு வட்டாரங்கள், “நாங்கள் ஏற்கனவே 380 கோடி டொலர் உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளோம். இப்போது அது சர்வதேச நாணய நிதியத்தை பற்றியுள்ளது. தொடர்ந்து உதவிகளை செய்ய முடியாது.”, என்று கூறியுள்ளன.

“இந்தியாவின் முடிவு ஆச்சரியமில்லை என்று தெரிவித்துள்ள இலங்கை அரச தரப்பு, சற்றுப் பெரியளவான ஆதரவு ஒன்று கிடைக்கும் என்று புதுடில்லி சில மாதங்களுக்கு முன்பு சமிக்ஞை தந்தது ”, என்றும் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும், இந்தஆண்டின் இறுதியில் ஜப்பான், சீனா, தென்கொரியாவுடன் இலங்கை நடத்தவுள்ள நன்கொடையாளர் மாநாட்டுக்கு இந்தியா அழைக்கப்படும் என்றும் அந்த வட்டாரம் தெரிவித்தது. (ஐ)

## உள்நாட்டு உற்பத்தி...

8.4 சதவீதமும், தொழில்துறை 10 சதவீதமும், சேவைகள் 2.2 சதவீதமும் சுருங்கியுள்ளன.

மின்சார துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பற்றாக்குறை, உரம் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகள் ஆகியவை பொருளாதாரத்தை பாதித்தன என்று புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேளாண்மையில், பயிர்ச்செய்கை ஓராண்டுக்கு முன் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், 32.3 சதவீதம் சரிந்துள்ளது. இதில், தேயிலை 19.7 சதவீதம், நெல் 15.6 சதவீதம், கடல் மீன்பிடி 15.3 சதவீதம், இறப்பர் 13.7 சதவீதம், கால்நடை உற்பத்தி 13.6 சதவீதம், காய்கறிகள் 13.2 என்ற வீதத்தில் குறைந்துள்ளன. ஆனால், நன்னீர் மீன்பிடி 11.2 சதவீதமும், தென்னை 10.5 சதவீதமும், வனவியல் மற்றும் மரம் வெட்டுதல் 9.0 சதவீதமும், பலசரக்கு பொருட்கள் 3.2 சதவீதமும் உயர்ந்துள்ளன.

இந்த காலாண்டில் தொழில்துறையில் உற்பத்தி 5.3 சதவீதம் சுருங்கியது. எனினும் ஆடைத்துறை, மற்றும் தோல் தொடர்பான பொருட்கள் 28.2 சதவீதம் உயர்ந்துள்ளன.

உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி 11.0 சதவீதம் குறைந்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தி 78.0 சதவீதம் குறைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதமாக இருக்கும் கட்டுமானம் 16.2 சதவீதம் சரிந்துள்ளது. சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் என்பன 26.7 சதவீதம் குறைந்துள்ளன.

சேவைகள் துறையில், காப்பீட்டு சேவைகள் 16.8 சதவீதம் சரிந்தன, நிரலாக்க மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் 8.4 சதவீதம் சரிந்தன.

குடியிருப்பு மற்றும் சொத்து விற்பனைகள் 6.0 சதவீதம் சரிந்தன. பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் 0.7 சதவீதம் சரிவடைந்தன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையை...

கையை ஜெனிவா அமர்வில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளரும் ஆறு கட்சிகளின் ஒருங்கிணைப்பாளருமான கு. சுரேந்திரன் இந்தக் கோரிக்கை மனுவை பேரவையில் வாசித்தார்.

மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட அந்த மனுவில்,

கடந்த காலத்தில் இடம்பெற்ற தமிழினத்தின்மீதான மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்களுக்கு இலங்கையை பொறுப்புக்கூற செய்ய வேண்டும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தியாகி...

யினரின் காலத்தில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு - தண்ணீரை ஒறுத்து நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு வீதியில் 1987 செப்ரெம்பர் 15ஆம் நாள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அவரின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் - 12ஆவது நாளில் - செப்ரெம்பர் 26ஆம் திகதி திலீபன் உயிர்நீத்தார்.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஒவ்வொரு வருடமும் வடக்கு - கிழக்கில் எழுச்சியாக அனுஷ்டிக்கப்படுவது வழக்கம். இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் - இறுதிப் போரின் பின்னரும் இந்த நினைவேந்தலுக்கும் தடை விதிக்கப்பட்டது.

எனினும், “நல்லாட்சி” அரசாங்க காலத்தில் நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், பின்னர் வந்த அரசாங்கம் தடை விதித்தது. இந்நிலையில், ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் நினைவேந்தலுக்கான தடையை நீக்கியது.

இந்நிலையில், நேற்றைய தினம் திலீபன் நினைவேந்தல் தாயகம் முழுவதும் இடம்பெற்றது. பிரதான நிகழ்வு, யாழ்ப்பாணம் - நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வில் தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த காலை 9.45 மணிக்கு மாவீரர் பண்டிதரின் தாயாரால் திலீபனின் திருவுருவப் படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து அவர் முதன்மை சுடரை ஏற்றி வைத்தார்.

தவிர, வேலணையிலுள்ள நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

இதேசமயம், தியாகி திலீபன் நினைவேந்தல் ஆரம்ப தினமான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவிலில் இருந்து நேற்று ஊர்தி பவனி ஆரம்பமானது. இந்தப் பேரணி எதிர்வரும் 26ஆம் திகதி நல்லூரை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## முஸ்லிம்கள்...

நிதியிடம் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர் அஷ்ஷெய்க் பி. ஏ. எஸ். சுபியான் மற்றும் அமைப்பாளர் ஏ. சி. எம். கலீல் ஆகியோர் இந்த மனுவை கையளித்தனர்.

அதில், முஸ்லிம்கள் வடக்கு மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதில் இருந்து இன்று வரை சரியான தீர்வுகள் மற்றும் மறுவாழ்வு இன்றி அவதியுற்று வருவது கவலைக்குரியது. மறக்கப்பட்ட சமூகமாக இருக்கும் வடக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்னைகளைத் தீர்க்க கூட்டத்தொடரில் கவனம் செலுத்தி, இறுதி அறிக்கையில் உள்வாங்கி, சர்வதேசத்தின் கவனத்தை தமது பக்கமும் திருப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ஐ)

## அமைச்சு...

னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து ஏப்ரல் மாதம் விலகினர். மே மாதம் 9 பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷவும், ஜூலை 13 கோட்டாபய ராஜபக்ஷவும் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினர்.

இந்நிலையில், மீண்டும் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் ராஜபக்ஷ குடும்பத்தவர்களுக்கு எந்தப் பதவியும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில், அண்மையில் இராஜாங்க அமைச்சர்களுக்கு பதவி வழங்கப்பட்டது. இதில், சஷீந்திர ராஜபக்ஷவுக்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டது.

இந்நிலையில், மேலும் சிலருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவிகள் வழங்கப்படவுள்ளன. இதில், நாமல் ராஜபக்ஷவின் பெயரும் உள்ளது என்று தகவல்கள் வெளியாகின. இந்நிலையிலேயே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், ”எனக்கு எந்த அமைச்சுப் பதவி பொருத்தம் என்பதை ஜனாதிபதி தான் தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் நான் தீர்மானிக்க முடியாது. நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. எனவே, மீளவும் அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனூடாக மூவின மக்களுக்கும் மென்மேலும் சேவையாற்றுவேன்” - என்றார். (ஐ)

## மக்கள்...

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த காலங்களில் அம்பாறை மக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாருடைய அடிமைகளோ அல்லது கைதிகளோ அல்லர். எனினும், அன்று சிறந்து விளங்கிய நாட்டின் விவசாயிகள், மீனவர்கள், கூலித்தொழிலாளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர், அங்கவீனமான குடும்பத்தினர், பாடசாலை சிறுவர்கள் என அனைவரும் இன்று உதவியற்ற நிலையில் உள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை கொன்ற ராஜபக்ஷர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்காவிட்டாலும் அவர்களுடன் நட்புறவு கொண்டாடும் பிரிவினர்களூடாக அமைச்சுப் பதவிகளைப் பெற்று ராஜபக்ஷர்கள் விரும்பியவாறு நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ. 10 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 5 இலட்சமும் என நட்டஈடு வழங்கப்பட்டாலும் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு கோடிக் கணக்கு. இவ்வாறான நிலவரங்களை உரு வாக்க மக்கள் வீதியில் இறங்கவில்லை. மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இது வல்ல. புதிய தேர்தல் மூலமே அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக அனைவரும் தயாராகவுள்ளோம்” - என்றார். (ஐ)

## ஏ. எல். பரீட்சை...

இதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்நாட்டு...

மைகள் மீறல்களுக்கு நீதி கோரி மேற்கொள்ளும் முன்னெடுப்புக்கள் காழ்ப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், பல முன்னெடுப்புக்கள் அரசியல் உள்நோக்கத்துடன் காழ்ப்புணர்ச்சியுடன்தான் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான, சகவாழ்வை முன்னெடுக்க விரும்பினால் உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக இந்த பிரச்னைகளை தீர்ப்பதுதான் சரி. நாம் பிரிந்து வாழ விரும்பினால் வேறு.

அன்று பிரதமராக இருந்த ரணிலால் பல விடயங்களை செய்ய முடியவில்லை. காரணம், அன்று ஜனாதிபதியாக வேறொருவர் இருந்தார். ஆனால், இன்று ரணிலே ஜனாதிபதி. பிரதமரும் அவருடன் ஒத்துழைத்து செல்லக் கூடியவர். இலங்கையர் என்ற வகையில் சமத்துவமாக ஜனாதிபதி நடத்துவார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வனஇலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் காலபோகச் செய்கையில் தலையிடக்கூடாது!

## அமைச்சர் டக்ளஸ் கண்டிப்பான உத்தரவு

கிளிநொச்சி, செப். 16

**இவ்வாண்டு காலபோகச் செய்கையின்போது, வன இலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் தலையிடக்கூடாது எனக் கண்டிப்பாக உத்தரவை அமைச்சர் டக்ளஸ் வெளியிட்டுள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த கூட்டத்தில் வன இலாகா மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது.

10 ஆண்டுகளுக்கு மேலாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட பகுதிகளை அடையாளப்படுத்தி கல்களை நடுவதுடன், விவசாயத்தில் ஈடுபடுவதை தடுப்பதும், அவர்களை தாக்கு வதுமான சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இந்த நிலையில் நான் இவ்வாறான கண்டிப்பான உத்தரவை இடுகிறேன். இவ் விடயம் தொடர்பில் சம்பந் தப்பட்ட அமைச்சருடனும் பேசியுள்ளேன். இன்று இவ்வாறான அறிவிப்பை விடுப்பேன் என அமைச்சரிடமும் கூறியிருந்தேன்.

அந்த வகையில், கடல் வேளாண்மை, நீர் வேளாண்மை, விவசாயம் ஆகிய விடயங்களில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தலையிடவேண்டாம்.

இவ்வருடம் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது. இது அனைவருக்கும் தெரியும். எனவே, குறித்த காணிகள் அந்தந்த திணைக்களங்களுக்கு தேவைப்பட்டால், மாற்று இடங்களை வழங்குவது உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டு பின்னர் நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்த வருடம் எவ்வித தலையீடுகளையும் செலுத்தவேண்டாம். விவசாய நடவடிக்கைகள் உரிய முறையில் இடம் பெற அனுமதிக்குமாறு கூறுகிறேன்-என்றார். (அ)

# அரச உத்தியோகத்தர்களை சாடுகின்றார் துமிந்த எம்.பி.

கொழும்பு, செப். 16

நாட்டில் அரச உத்தியோகத்தர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றினால் அரசியல்வாதிகள் மக்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகமாட்டார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வில்பத்து தேசிய பூங்காவை அண்மித்த கிராமங்களின் காணி எல்லைகள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# பாடசாலைகளுக்கும் 19ஆம் திகதி விடுமுறை

கொழும்பு, செப். 16

எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த பிரித்தானிய மகாராணி 2ஆம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கைக் குறிக்கும் வகையில் முன்னதாக 19ஆம் திகதி அரசாங்கத்தால் சிறப்பு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அன்றைய தினம் தேசிய துக்க நாளாகவும் பிரகடனப் படுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே, அன்றையதினம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளும் குறித்த நாளை விடுமுறை தினமாக கருதுமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)



# தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் யாழ். பல்கலையிலும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான தூபி வளாகத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் முதல் தேசிய எழுச்சிக்கொடி கட்டப்பட்டு பிரதான தூபியில் மாணவர்களால் அமைக்கப்பெற்ற நினைவாலயத்தில் போரால் பாதிக்கப்பட்ட மாணவனால் பொதுச் சுடரேற்றப்பட்டு மாணவர்களால் ஈகச் சுடரும் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவுருவப் படத்துக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதில் யாழ்.பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுடன் இஸ்லாமிய, சிங்கள மாணவர்களும், யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் உணர்வு பூர்வமாக நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக எதிர்வரும் 26ஆம் திகதி வரை மாணவர்களால் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# மாகல்கந்த கடலில் நீராடச் சென்ற மூன்று இளைஞர்களில் இருவர் பலி!

கொழும்பு, செப். 16

மாகல்கந்த கடலில் நீராடச் சென்ற மூன்று இளைஞர்கள் அலையில் அடித்துச் செல்லப் பட்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அலைகளில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் மீட்கப்பட்டு பேருவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், மற்ற இருவரும் காப்பாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

17, 18 மற்றும் 19 வயதுடைய மூன்று இளைஞர்களே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளனர். (அ)

# பயங்கரவாதச் சட்டத்தை எதிர்த்து மட்டக்களப்பில் இன்று போராட்டம்

மட்டக்களப்பு, செப். 16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கொழும்பு - மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கான ஆதரவுப் போராட்டம் மட்டக்களப்பில் இன்று நடைபெறவுள்ளது.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்போம்' என்ற தொனிப்பொருளில் காலை 7.30 மணிமுதல் காந்தி பூங்கா முன்றலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

"இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க - அதிலும் தமிழ் பேசும் மக்கள் மீது கூடுதலாகத் திணிக்கப்படும் இந்தச் சட்டத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு உங்கள் ஆதரவை வழங்குங்கள்" - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# காட்டு யானைகள் எண்ணிக்கை 7,000!

கொழும்பு, செப். 16

இலங்கையில் காட்டு யானைகளின் எண்ணிக்கை 7,000ஆக அதிகரித்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை காட்டு யானைகளின் எண்ணிக்கை சுமார் 5,600ஆக காணப்பட்டதாக கூறப்பட்ட நிலையில், அண்மைய கணக்கீடுகளின் படி இலங்கையில் காட்டு யானைகளின் எண்ணிக்கை 7,000ஐ கடந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் தந்தத்தை உடைய யானைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஊர்தி பவனி பொத்துவிலில் ஆரம்பம்

அம்பாறை, செப். 16

தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் வரையான திலீபனின் திரு உருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி நேற்று பொத்துவில் நகரில் இருந்து ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்வில் பொத்துவில் நகரில் நேற்று காலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு பொது மக்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பிரதான வீதி வழியாக திருக்கோவில் நகரை வந்தடைந்தது. அங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தியாக தீபம் திலீபன் தொடர்பான உரை ஒன்றை நிகழ்த்தினார்.

நேற்று பொத்துவில் நகரில் ஆரம்பமாகிய இந்த பவனி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாக எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம், நல்லூர் கந்தன் ஆலயத்தில் நிறைவு பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.00 அணி :இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ரீவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு